நம்புங்க... அறிவியலை;
நம்பாதீங்க... சாமியார்களை!

# விஞ்ஞானிகளை அழித்த மதவெறி

திராவிடர் விடுதலைக் கழகம்
வெளியீடு

# நம்புங்க... அறிவியலை;
# நம்பாதீங்க... சாமியார்களை!

ஒவ்வொரு நாளும் பத்திரிகைளைப் புரட்டினால்....

தொலைக்காட்சிகளைப் பார்த்தால்....

நெஞ்சம் பதறுகிறது.!

அப்பப்பா.... நம்முடைய மக்களில் பலரும் இந்த அறிவியல் யுகத்திலும் மூடநம்பிக்கைகளில் வாழ்க்கையைத் தொலைக்க வேண்டுமா?

- சாமியார்களிடம் ஏதோ 'மந்திர சக்தி' இருப்பதாக நம்பி ஏமாந்து நிக்குறாங்க...
- பிறக்கப் போவது பெண் குழந்தைகள் என்றால், அந்த மழலையை கருவிலேயே அழிக்கிறாங்க... 10 வயதுலேயே 30, 40 வயது ஆணுக்கு நம்ம பெண் குழந்தைகளை கல்யாணம் கட்டி அவுங்க வாழ்க்கையை பாழடிக்கிறாங்க.
- "இந்த 'சனியன்' பொறந்ததுலேயிருந்து குடும்பமே விளங்காமல் போச்சு"ன்னு சோதிடக்காரர்கள் பேச்சை நம்பி பெற்ற குழந்தைகளையே சாகடிக்கிறாங்க.

- குடும்பத்தின் பிரச்சினைகள்; மன அழுத்தங்கள்; தங்களை கவனிப்பாரில்லையே என்ற ஏக்கம்; அச்சம்; இப்படி பல்வேறு உளவியல் காரணங்களால் மனநலம் பாதிக்கப்பட்ட நமது சகோதரிகளை மனநல மருத்துவரிடம் அழைத்துப் போகாமல் பேய் பிடிச் சிருக்குன்னு கூறி, 'மந்திரவாதி'களை வரவழைத்து அடிச்சு சித்திரவதை செய்யுறாங்க.
- தொழிலில் இழப்பு; குடும்பத்தில் பிரச்சினை என்றால் குடியிருக்கும் வீட்டுக்கு வாஸ்து சரியில்லைன்னு நம்பிகிட்டு கடனை வாங்கி வீட்டை மாற்றி மாற்றி இடிச்சுக் கட்டுறாங்க.
- குழந்தைகளை சுதந்திரமா வளரவிடாம அறிவியலை முடக்கும் நம்பிக்கைகளைத் திணிக்கிறாங்க...
- எதற்கெடுத்தாலும் 'பரிகாரம்', 'சடங்குகள்' செய்தால் எல்லாம் சரியாயிடும் என்று நம்பி, பிரச்சினைகளிலிருந்து மீளவே முடியாம தவிக்கிறாங்க...

காலம் காலமாக நம் மீது திணிக்கப்பட்ட பல நம்பிக்கைகள் வாழ்க்கையை பாழாக்கி வருவதை நாம் உணர வேண்டாமா?

நாம் அறிவியலை ஏற்று வாழத் தொடங்கிவிட்டால்... மூடநம்பிக்கைகளை விட்டுத் தொலைத்தால்... அப்போது பாருங்கள்....

– வாழ்க்கை தெளிந்த நீரோடையாக மாறும்;

– வாழ்க்கையில் குழப்பங்கள் வராது;

– அறிவியல் நம்மை கைபிடித்து அழைத்துச் செல்லும்;

– நம் சக மக்களையும் நம் சமூகத்தையும் அன்போடு அது அரவணைக்கச் செய்யும்.

அந்த அறிவியல் சிந்தனையை நம் மக்களிடம் கொண்டு செல்லும் முயச்சியே இந்த வெளியீடு; வாங்குங்கள், பரப்புங்கள்!

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

**தொகுப்பு : விடுதலை இராசேந்திரன்**

# அறிவியல் வழியாக நிரூபணம் ‘பிரார்த்தனை’ எந்தப் பயனும் தராது

‘எனக்காக – எனது நோய் தீர்வதற்காக பிரார்த்தனை செய்யுங்கள்’ – இது நோயாளிகளைப் பார்க்க வருவோரிடம் நோயாளிகள் வைக்கும் கோரிக்கை. “செய்ய வேண்டிய சடங்குகளை எல்லாம் செய்து முடித்து விட்டோம்; இனி நம் கையில் எதுவும் இல்லை; எல்லாம் ஆண்டவனிடம் தான்” – இதுவும் வழக்கமாக கேட்கப்படும் உரையாடல்கள்.

பல மருத்துவர்கள் – அறுவை சிகிச்சையை முடித்த பிறகு, “சிகிச்சை வெற்றி பெற்றுவிட்டது; ஆனாலும் இறுதி முடிவு ஆண்டவனிடம்தானே!” என்று கூறுவது அவர்களுக்கான பாதுகாப்பு. அறுவை சிகிச்சை தோல்வி அடைந்து விட்டால் பழியை ஆண்டவன் மீது போட்டு தப்பித்துக் கொள்ளும் தந்திரம்தான்!

‘பிரார்த்தனை’யால் நோய் தீருமா? ‘பிரார்த்தனை’யால் பலன் கிடைக்குமா?

‘பிரார்த்தனை’ என்பது ஒரு மூட நம்பிக்கைதான். பிரார்த்தனைகளில் நம்பிக்கை உள்ள குடும்பங்களுக்கு

கடவுள் ஏன் நோயைத் தரவேண்டும்? நோயைத் தராமலே இருந்திருக்கலாம் அல்லவா? கடவுள் நோயைத் தருவார்; பிறகு அதைத் தீர்க்க அதே கடவுளிடம் 'பிரார்த்தனை' செய்ய வேண்டும் என்றால், உடனே இது எந்த ஊர் நியாயம்? என்று திருப்பிக் கேட்கத் தோன்றுகிறதா, இல்லையா? ஆனால் அப்படி பலரும் கேட்க மாட்டார்கள். காரணம், அது பக்தியின் பெயரால் திணிக்கப்பட்ட நம்பிக்கை.

சரி; 'பிரார்த்தனை' நோய் தீர்க்குமா? என்ற கேள்விக்கு 'தீர்க்காது' என்று ஆய்வுபூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கும் ஒரு சில வரலாற்று செய்திகளை பார்ப்போம்.

உயிரின் பரிணாம வளர்ச்சியை அறிவியல்பூர்வமாகக் கண்டறிந்து, உலகுக்கு அறிவித்த விஞ்ஞானி டார்வின். அவரது நெருங்கிய நண்பர் ஃபிரான்சிஸ் கால்டன். அவர் 'பிரார்த்தனை' பயன் தருமா? என்ற ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். பிரிட்டிஷ் இளவரசர் குடும்பம் நலம் பெற வேண்டும் என்பதற்காக அந்த நாட்டிலுள்ள சர்ச்சுகளில் கூடும் அவ்வளவு பேரும் பிரார்த்தனை செய்தார்கள். மற்ற குடிமக்களோ தங்களின் குடும்ப நலன்களுக்காக தாங்களோ அல்லது உறவினர்களோ மட்டுமே 'பிரார்த்தனை' செய்கிறார்கள். அரச குடும்பத்துக்காக நாடே செய்யும் 'பிரார்த்தனை' ஏனைய தனிநபர் பிரார்த்தனைகளைவிட வலிமையாக இருந்திருக்கிறதா? பயன் தந்திருக்கிறதா? அதற்காக கள ஆய்வுகளில் இறங்கி புள்ளி விவரங்களை சேகரித்து ஆராய்ந்தபோது இரண்டு 'பிரார்த்தனை'களுக்கும் வேறுபாடுகள் இருப்பதை புள்ளி விவரங்கள் நிரூபிக்கவில்லை.

அதன் பிறகு சில வயல்வெளிகளை தேர்வு செய்து அங்கே வளரும் பயிர் களுக்காக 'பிரார்த்தனை' செய்தார். பயிர்கள் செழித்து, விரைவாக வளருகிறதா என்பதை அறிவதற்கான முயற்சி; 'பிரார்த்தனை'களால் அப்படி ஒன்றும் வளரவில்லை என்பதை கண்டறிந்தார்.

இதேபோல் பிரிட்டனில் தலை சிறந்த மத சிந்தனையாளர்களாக கருதப்படும் மூவரில் ஒருவர் ரஸ்ஸல் ஸ்டன்னார்டு இயற்பியல் விஞ்ஞானியான அவர் 'பிரார்த்தனை' பயன் தருகிறதா என்பதற்கு ஆய்வு ஒன்றை மேற்கொண்டார்.

அமெரிக்காவின் பாஸ்டன் மருத்துவமனையில் புகழ் பெற்ற இருதய அறுவை சிகிச்சை மருத்துவர் ஹெர்பர்ட் பென்சன். 'மருத்துவ சிகிச்சை வெற்றி பெறுவதற்கு பிரார்த்தனைகள் நல்ல பயனைத் தருகின்றன' என்பது இவரது நம்பிக்கை. தனது நம்பிக்கையை ஆய்வுக்கு உட்படுத்த அவர் திட்டமிட்டார். இது மிகப் பெரும் ஆய்வு. இந்த ஆய்வுக்கு 'டெம்பிள்டன்' அறக்கட்டளை **24** மில்லியன் அமெரிக்க டாலர் செலவு செய்ய முன் வந்தது. இந்த ஆய்வு குறித்து பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. இந்த ஆய்வில் மத நம்பிக்கையுள்ளவர்கள் மட்டுமே பங்கெடுக்க அனுமதிக்கப்பட்டனர். ஆறு மருத்துவமனைகளில் இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்யத் தயாராக இருந்த **1802** நோயாளிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அவர்கள் மூன்று பிரிவினர்களாக படுக்க வைக்கப்பட்டனர். முதல் பிரிவினருக்காக தனித்தனியாக அவர்களுக்கு குறியீட்டுப் பெயர்கள் தந்து பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன. ஆனால் தங்களுக்காக 'பிரார்த்தனை' நடக்கிறது என்பது அவர்களுக்கு தெரியாது. இரண்டாவது பிரிவு நோயாளிகளுக்காக 'பிரார்த்தனை' ஏதும் நடத்தப்படவில்லை. தங்களுக்காக 'பிரார்த்தனை' ஏதும் நடக்கவில்லை என்பது இவர்களுக்கு தெரியாது. மூன்றாவது பிரிவினருக்கு 'பிரார்த்தனை'கள் நடத்தப்பட்டன. தங்களுக்காக 'பிரார்த்தனை'கள் நடப்பதை அவர்கள் அறிவார்கள். 'பிரார்த்தனை' நடத்தப்பட்டவர்களுக்கும் நடத்தப்படாதவர்களுக்கும் ஒப்பீடு செய்வதே இதன் நோக்கம். தங்களுக்காக பிரார்த்தனை நடக்கிறது என்பதை ஒரு நோயாளி அறியும்போது அதனால் ஏற்படும் மன அழுத்தத்தைக் கண்டறிவதற்கே மூன்றாவது அணி.

மூன்று சர்ச்சுகளை சேர்ந்தவர்கள் பிரார்த்தனைகளை செய்தனர். ஒரு சர்ச் மின்னசோடாவிலும், மற்றது மாசூசெட்சிலும் மற்றது மிசோரியிலும் இருந்தன. இவை அனைத்தும் மூன்று மருத்துவமனைகளிலிருந்து வெகு தொலைவில் இருந்தன. பிரார்த்தனைக்கு உரிய நோயாளியின் முதற்பெயரும் குடும்பப் பெயரின் முன்னெழுத்தும் தரப்பட்டிருந்தன. (இங்கே அர்ச்சனைக்கு பார்ப்பனர்களிடம் பெயர், நட்சத்திரம் கொடுக்கும் அதே கதைதான்) ஆய்வுகள் தரமாகவும் துல்லியமாகவும் நடந்தன. "அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிய வேண்டும். சிக்கல்கள் இன்றி விரைந்து நலம் பெற வேண்டும்" என்பதே 'பிரார்த்தனை'.

ஆய்வின் முடிவுகள் என்ன? 'பிரார்த்தனை' செய்யப்பட்ட நோயாளிகளுக்கும் செய்யப்படாதவர்களுக்குமிடையே எந்த வேறுபாடும் இல்லை. அதாவது 'பிரார்த்தனை'க்காக பலன் ஏதும் கிடைக்கவில்லை. 'பிரார்த்தனை' செய்யப்படாமைக்காக 'தீங்கு' ஏதும் நிகழவில்லை. ஆனால், தங்களுக்காக 'பிரார்த்தனை' நடந்தது என்பதை தெரிந்தவர்களுக்கும் 'பிரார்த்தனை' பற்றி எதுவுமே தெரியாதவர்களுக்கும் இடையே வேற்றுமை காணப்பட்டது. 'பிரார்த்தனை' நடப்பதாக அறிந்தவர்களுக்கு அறியாதவர்களைவிட அதிக சிக்கல்கள் நிகழ்ந்தன. தங்களுக்காக 'பிரார்த்தனை' நடத்தப்பட்டதாக அறிந்த நோயாளிகள், விளைவு என்னவாகுமோ என்று கூடுதல் மன அழுத்தத்துக்கு உள்ளானார்கள். ''அய்யோ, டாக்டரே எனக்காக பிரார்த்திக்கிறாரே; அப்படியானால், எனது வியாதி மிகவும் ஆபத்தானதோ'' என்ற கூடுதல் அச்சம் அவர்களை மன அழுத்தத்திற்கு உள்ளாக்கியிருக்கலாம் என்று உளவியல் மருத்துவ ஆராய்ச்சியாளர் சார்லஸ் வெத்யா கூறினார்.

அமெரிக்க ஆய்வு இதழ் (American Heart Journal) ஏப்.2006இல் இந்த ஆய்வு பற்றிய விரிவான செய்திகளை பதிவு செய்தது.

மதம் கட்டமைத்த நம்பிக்கை சரிந்து வீழ்ந்துவிட்டதே என்று பதறிய மதவாதிகள், இப்படி ஆய்வு நடத்தப்பட்டதை எதிர்த்து கண்டனம் தெரிவித்தார்கள்.

ஆய்வை நடத்தியது முழுக்க முழுக்க மத நம்பிக்கையாளர்கள் ஆய்வு குறித்து முன்கூட்டியே விளம்பரம் செய்யப்பட்டது. அப்போதெல்லாம் எதிர்ப்பு தெரிவிக்காதவர்கள், முடிவுகள் – தங்கள் முகத்திரையைக் கிழித்தெறியும் போது துள்ளி குதித்தார்கள்.

'பிரார்த்தனை' எந்தப் பயனையும் தராது; காலம் முழுதும் சடங்குகளிலும் 'பிரார்த்தனை'களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் சங்கராச்சாரிகளே மரணத்தைத்தான் தழுவுகிறார்கள். வேண்டுமானால், அவர்களை முக்தி அடைந்தார்கள் என்றும், மற்றவர்களை காலமானார்கள் என்றும் கூறிக் கொள்ளலாம்; அவ்வளவுதான்!

**ஆதாரம்: ரிச்சர்ட் ஹாக்கின்ஸ் எழுதிய "The God Delusion" நூல்.**

# 'பாவமன்னிப்பு' விற்பனைக்குத் தயார்

ஆயிரக்கணக்கான வருடங்களுக்குமுன் – நாம் எவ்வளவோ உயர்ந்த நாகரிகமும் முற்போக்கும் பெற்றிருந்த காலத்தில், ஆங்கிலேயர்கள் மிக மோசமான வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அக்காலத்தில் நம்மைவிட மிக மோசமாக மத சம்பந்தமான பழக்க வழக்கங்களை அனுஷ்டித்து வந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் நிலை, இன்றைய நமது கேவல நிலையைவிட மிக மோசமாகவும், மானக் கேடாகவுமே இருந்து வந்திருக்கிறது. உதாரணமாக, அக்காலத்தில் அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மன்னிப்புப் பெற ஒரு சுலபமான முறையைக் கடைப்பிடித்து நம்பச் செய்து வந்தார்கள். இன்று நமது நாட்டில் புரோகிதர்களால் நாம் ஏமாற்றப்படுவது போலவே அங்குள்ள பாதிரிமார்களால் அவர்கள் ஏமாற்றப்பட்டு வந்தார்கள்.

அதாவது, 'பாவமன்னிப்புச் சீட்டு' வாங்குவது என்பதாகும். ஒருவன் எத்தகைய தீச்செயலையும் செய்துவிட்டுப் பாதிரியாரிடம் சென்று, ''அய்யா! நான் இன்ன பாவம் செய்தேன். அதற்கு 'மன்னிப்பு டிக்கெட்' வேண்டும்'' என்று கேட்டதும், உடனே

பாதிரியார், அந்தந்தப் பாவத்தின் நிலைக்குத் தக்கபடி கிரயம் போட்டுப் பணம் வாங்கிக் கொண்டு டிக்கெட் கொடுத்து விடுவதும் அங்கே இருந்தது. அந்த டிக்கெட்டுகளை கடைகளிலும், சந்தைகளிலும் கட்டுக்கட்டாகக் கட்டிப் போட்டுக் கொண்டு விற்று வந்தார்கள். சந்தைகளில் மற்ற சாமான்கள் விற்பதுபோல பாவமன்னிப்பு டிக்கெட்டுகளும் விசேஷமாக விற்கப்பட்டு வந்தன. இம்மூடக் கொள்கையிலிருந்து ஜன சமூகத்தை விழிக்கச் செய்ய அநேக சீர்திருத்தக்காரர்கள் அக்காலத்தில் தோன்றினர்.

ஒரு பாதிரியார், முக்கியஸ்தர், ஒரு சீர்திருத்தக்காரர், அப் பாதிரியாரிடம் சென்று, 'இதுவரை செய்த பாவங்களுக்குத் தான் மன்னிப்புக் கொடுக்கின்றீர்களே! இனிமேல் புதிதாகச் செய்யப் போகும் பாவங்களுக்கும் மன்னிப்புச் சீட்டு இருக்கிறதா?' என்று கேட்டதற்கு அப்பாதிரியார், 'ஆம்! இருக்கிறது' என்று கூறி, 'இனிமேல் செய்யப்போகும் பாவத்தை மன்னிப்புச் செய்வதற்காக' என்று பணம் வாங்கிக் கொண்டு ஒரு டிக்கெட்டைக் கொடுத்தார். அந்த டிக்கெட்டை அச்சீர்திருத்தக்காரர் வாங்கி வைத்துக் கொண்டு ஒரு இடத்தில் நின்று கொண்டிருந்தார். சந்தையில், அப்பாதிரி டிக்கெட்டுகளை எல்லாம் விற்றுவிட்டுப் பணத்தை மூட்டை கட்டிப் போட்டுக் கொண்டுவரும் வழியில், அவனை அடித்து அவனிடமிருந்த பணத்தை யெல்லாம் பிடுங்கிக் கொண்டார்.

அச்சீர்திருத்தக்காரரைப் பார்த்துப் பாதிரியார், "நான் பாவ மன்னிப்பு டிக்கெட் விற்பவரல்லவா? உலகிற்கே நன்மை செய்யும் என்னை இவ்விதம் துன்பப்படுத்திப் பணத்தையும் பிடுங்கிக் கொள்வது பெரும் பாவமல்லவா?" என்று கேட்டதற்கு – அச்சீர்திருத்தக்காரர், "கோபித்துக் கொள்ளாதீர்கள். தவறாக நான் ஒன்றும் செய்துவிடவில்லை. இதோ இந்தப் பாவத்திற்கும் மன்னிப்பு டிக்கெட் வைத்திருக்கிறேன். அதை, உம்மிடம்தான் முதலில் வாங்கினேன். நீர்தானே – இனிமேல் செய்யும் பாவத்தையும் இந்த டிக்கெட் மன்னித்துவிடும் என்று கூறினீர்" என்று சொன்னாராம்.

அவ்வளவு மோசமான நிலையில் இருந்த அவர்கள் பாதிரிமார்களின் ஆதிக்கத்தை ஒழித்த பின்பே சுயமரியாதை பெற்றுத் தங்கள் நாட்டைத் தாங்களே ஆளுந்திறமையுடன் மட்டுமல்லாமல், உலகிலேயே பெரும் பகுதியை ஆளும் நிலைமையையும் பெற்றுள்ளார்கள்.

**(பெரியார் பேச்சு –**
**'வைக்கம் வீரர் சொற்பொழிவு' நூலிலிருந்து – 1928)**

# 'யோகா'வை முன்னிறுத்தி மதப் பிரச்சாரம்!

'யோகா'வை சர்வதேச அளவில் அங்கீகரிக்கச் செய்து விட்டதில் மோடிக்கு அப்படி ஒரு பெருமை. ஜூன் 21 'யோகா நாள்'! மோடி அமைச்சர்கள் அத்தனை பேரும் ஆங்காங்கே 'யோகா' செய்யும் நிர்ப்பந்தம். 'யோகா' என்பது மூச்சுக் கலை பயிற்சி என்கிறார்கள். இதை ஏற்பதும் ஏற்க மறுப்பதும் அவரவர் விருப்பம் சார்ந்தது. பிரச்சினை எங்கே வருகிறது என்றால், இதை இந்து மதத்தோடு முடிச்சுப் போடும் போதுதான். அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் இயங்கும் இந்திய தூதரகங்கள், சர்வதேச நாளில் நடத்தும் 'யோகா' நிகழ்ச்சிகளுக்கு 'சங் பரிவார்' முன்னணி அமைப்புகளுடன் இணைந்து செயல் படுகின்றன. இந்துத்துவ அரசியலுக்கு யோகாவை ஒரு கருவியாகப் பயன்படுத்தும் இவர்களின் உள்நோக்கம் மிகவும் அற்பமானது.

மோடியின் யோகா குரு எச்.ஆர். நாகேந்திரா. இவர் பெங்களூருவிலுள்ள 'விவேகானந்தா யோகா அனுசந்தான் சமந்தானா' என்ற பல்கலைக்கழகத்தின் வேந்தராக வும் இருக்கிறார். அரசு ஆலோ சனைப்படி இவரது தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு 'யோகா'வை பாடத் திட்டத்தில் சேர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. யோகா பாட திட்டத்தில் பகவத் கீதை, இராமா யணம், மகாபாரதம், நாரத பக்தி சூத்திரம், ராஜயோகம், சமஸ்கிருத சுலோகங்கள், மந்திரங்கள்,

பஜனைப் பாடல்களை இணைத்தார்கள். (என்ன காரணத்தினாலோ ஆர்.எஸ்.எஸ். கொள்கை, மோடியின் 'சாதனை'களை யோகா பாடத் திட்டத்தில் சேர்க்காமல் விட்டு விட்டார்கள்) மத்திய மனித வள அமைச்சகத்திடம் குழுவின் பாடத் திட்டம் சமர்பிக்கப்பட்டது. அவ்வளவுதான். உடனே 'பிசியோதெரபி' (உடல் இயக்கப் பயிற்சி மருத்துவம்) மருத்துவப் படிப்பு பாடத் திட்டத்தில் இணைக்குமாறு பல்கலைக்கழக மான்யக் குழு அனைத்து 'பிசியோதெரபி' கல்வி நிறுவனங் களுக்கு சுற்றறிக்கையை அனுப்பியது. ஆனால் 'பிசியோதெரபிஸ்ட்' மருத்துவர் சங்கம் இதை ஏற்கவில்லை.

''தற்போது, 'பிசியோதெரபி' பட்டப் படிப்பில் 5000 மணி நேரம் பாடம் நடத்தப்படுகிறது. பாடத்தை முழுமையாக பயிற்றுவிக்க இருக்கும் நேரமே போதாமல் உள்ளது. இதில் 'யோகா' பாடத்தைக் கட்டாய மாக்கினால் 'பிசியோதெரபிஸ்ட்' படிப்பு கடுமையாக பாதிக்கும். அதுமட்டுமல்ல, 'பிசியோதெரபி' மருத்துவக் கல்வி நிறுவனங் கள் சர்வதேச அங்கீகாரத்துடன் உலகம் முழுதும் இயங்குகின்றன. ஆனால், 'யோகா' வுக்கு மருத்துவப் பயன் உண்டு என்பது இதுவரை அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட வில்லை'' என்று பிசியோதெரபிஸ்டுகள் சங்கத் தலைவர் அண்ணாமலை கூறிவிட்டார். எதிர்ப்புக்கு பிறகு பல்கலைக்கழக மான்யக் குழு சுற்றறிக்கையை திரும்பப் பெற்றுக் கொண்டு விருப்பமுள்ளவர்கள் படிக்கலாம். பாடத் திட்டத்தில் இடம் பெறாது என்று அறிவித்து விட்டது.

இராம்தேவ், ஜக்கி வாசுதேவ், இரவிசங்கர் போன்ற 'கார்ப்பரேட்' ஆன்மிகவாதிகள் கூறுவதாலேயே யோகா அறிவியல் ஆகிவிடாது.

ஒரு மனிதனின் உடல் என்பது வாழ்வு நிலை, அது நிர்ணயிக்கும் அரசியல் கொள்கை, மருத்துவ விஞ்ஞானம் மற்றும் சமூகத்தோடு தொடர்புடையது. தன்னை சூழ்ந்து நிற்கும் பிரச்சினைகளோடு பிணைந்துள்ள மனநிலைகளை துண்டித்துவிட்டு, மூச்சுப் பயிற்சிகளால் மட்டுமே தீர்வுகளைக் கண்டுவிட முடியாது. அன்றாட வாழ்க்கைக்காகவே போராடும் மக்களிடம் யோகாவின் 'மகத்துவங்களை'ப் பேச முடியுமா? மலக் குழிக்குள் மூச்சை அடக்கி மூழ்கி, விஷ வாயுக்களோடு போராடும் மனிதர்களும், கல்விக் கட்டணச் சுமை, வீட்டுக் கடன், தொழில் பிரச்சினை, ஜாதிய ஒடுக்குமுறை, குடும்பச் சுமை என்ற வாழ்க்கைப் பிரச்சினை களில் சிக்கி மூச்சுத் திணறிப் போய் நிற்பவர்களிடம் மூச்சுப் பயிற்சி மட்டும் தீர்வாகி விடுமா? என்று சமூகவியலாளர்கள் எழுப்பும் கேள்விகளில் நியாயம் இல்லை என்று புறந்தள்ளி விட முடியுமா?

# இங்கர்சால் கூறிய பாதிரியார் கதை

வியாதிகளுக்கு ஆவிகளும், பேய்களுமே காரணம் என்று ஒரு காலத்தில் மக்கள் மூடநம்பிக்கை களில் மூழ்கிக் கிடந்தார்கள். 'அம்மை நோய்' வந்து விட்டால் 'மாரியாத்தா' உடலுக்குள் குடியேறியிருக்கிறாள் என்று நம்பி சிகிச்சை தர மாட்டார்கள். 'மாரியம்மாள் தாலாட்டு' புத்தகத்தை நோயாளிகள் அருகில் உட்கார்ந்து படிப்பார்கள். 'ஆத்தா முத்துப் போட்டிருக்கிறாள்' என்பார்கள். வேப்பிலை களை பறித்து படுக்கைக்கு அருகே போடுவார்கள். சிகிச்சை அளிப்பது 'பாவம்' என்று நம்பினார்கள். 'பெரியம்மை' என்பது ஒரு கடுமையான நோய்க் கிருமியின் தொற்று. சிகிச்சை இல்லாமையினால் ஏராளமான இறப்புகள் நடந்தன. அதற்குப் பிறகுதான் ஆட்சியாளர்கள் தலையிடத் தொடங் கினார்கள். உரிய மருத்துவ சிகிச்சைகள் வழங்க முன்வந்தபோது அதை மக்கள் ஏற்க மறுத்த நிலையிலும் உயிர் ஆபத்துகள் குறித்து விளக்கி பரப்புரை செய்யும் நிலை உருவானது. 'பெரியம்மை' ஒழிப்புக்காகவே தனி சுகாதாரத் துறை உருவாக்கப்பட்டு ஊழியர்களும் நிய மிக்கப்பட்டனர். தொடர்ச்சியான இயக்கங்களுக்குப் பிறகு 'மாரியாத்தா' மூட நம்பிக்கை முற்றாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

‘‘உங்கள் ஊரில் எவருக்காவது பெரியம்மை நோய் வந்திருக்கிறதா? உடனே சுகாதார மய்யத்துக்கு தொடர்பு கொள்ளுங்கள்’’ என்று கிராமங்களில் சுகாதாரத் துறையே அறிவிப்புப் பலகைகளை வைத்தது. இவையெல்லாம்கூட பகுத்தறிவுப் பரப்புரைதான்; பகுத்தறிவுப் பரப்புரையினால் ‘மனம் புண்படுகிறது’ என்று இப்போதும் எதிர்ப்பவர்கள் இருக்கவே செய்கிறார்கள். உயிர் போவதற்கு வழிவகுக்கும் மூட நம்பிக்கைகளை ஒழித்து மக்களைக் காப்பாற்றும் நோக்கில் அறிவுச் சிந்தனைகளை விதைப்பது, மனம் புண்படும் செயலா?

இந்த மூட நம்பிக்கைகள் ஒரு காலத்தில் உலகம் முழுதும் கொடிகட்டிப் பறந்தன. இப்போது அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் விழிப்புணர்வு பெற்றுவிட்டார்கள். நோய் தீர்க்க மருத்துவர்களை நாடுகிறார்கள்.

அமெரிக்காவில் இந்தியாவைப்போல ‘புரோகித–பூசாரிகள்’ கூட்டம் இருந்தது. ‘‘கன்னிமேரியின் தாய் என மதிக்கப்படுவரின் எலும்பு என்னிடம் இருக்கிறது; இந்த எலும்பினால் நோயை குணமாக்கலாம்; பேயை விரட்டலாம்’’ என்று கத்தோலிக்க பாதிரியார்கள் ஏமாற்றி வந்தார்கள். பாமர மக்கள் அதையும் நம்பி வந்தார்கள் என்று உலகப் புகழ் பெற்ற பகுத்தறிவு மேதை இங்கர்சால் கூறுகிறார். அங்கே நிலவிய மூடநம்பிக்கை குறித்து அவர் கூறிய கதை இது.

‘‘ஒரு ஞானியின் எலும்புமீது கட்டப்பட்ட ஆலயத்துக்கு ஒரு பாதிரி அதிபதியாக இருந்தார். அந்த எலும்புகளுக்கு நோய்களைக் குணப்படுத்தும் சக்தியிருந்ததாம். அனைவரும் தொடுவதற்கு ஏற்றவாறு அந்த எலும்புகள் ஒரு பீடத்தின் கீழ் புதைக்கப்பட்டிருந்தன. பீடத்தின் கீழ் உள்ள ஒரு துவாரம் வழியாகக் கையை விட்டு நோயாளிகள் அந்த எலும்பைத் தொட்டுவிட்டுச் செல்வார்கள். அந்த எலும்பினால் நன்மை அடைந்ததாகப் பலர் நம்பினார்கள். அநேகர் பெருந்தொகை காணிக்கையாக வழங்கினார்கள்.

ஒருநாள் அந்த ஆலய அதிகாரியான பாதிரி தன் உதவிப் பாதிரியை நோக்கிப் பின் வருமாறு கூறுகிறான்:

‘‘மகனே ஆலய வருமானம் குறைந்துவிட்டது. கோவில் காரியங்களை நான் தனியாக நடத்திக் கொள்வேன். நீ வேறு இடத்துக்குப் போ. என்னுடைய வெள்ளைக் கோவேறு கழுதை யையும் கொஞ்சம் பணத்தையும் கொடுத்து உன்னை ஆசீர்வதித்து அனுப்புகிறேன்’’ என்றான். அப்படியே அந்த இளைஞன் அந்தக் கோவேறு கழுதை மீதேறி வேறிடத்துக்கு சென்றான்.

கொஞ்ச நாட்களில் அவனிடமிருந்த பணம் செலவாகிவிட்டது. கோவேறு கழுதையும் செத்துப் போயிற்று. உடனே அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. கழுதையைப் பாதையருகே ஒரு இடத்தில் புதைத்தான். பாதை வழி வருவோர் போவாரை நோக்கி ''நற்குணமுடைய சகோதரர்களே, இந்த இடத்தில் ஒரு புண்ணியவான் சமாதி வைக்கப் பட்டிருக்கிறார். அவர் சமாதி மீது புதிய ஆலயம் கட்டப் பொருளுதவுங்கள்'' என்று அவன் மன்றாடிக் கேட்கத் தொடங்கினான்.

அவ்வளவுதான் உடனே தாராளமாகப் பணம் கிடைத்தது. வெகு சீக்கிரம் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. கழுதையின் எலும்பைத் தொட்டுப் புனிதரா வதற்காக ஆயிரக்கணக்கானவர்கள் ஒவ்வொரு நாளும் அக் கோவிலுக்கு வரத் தொடங்கினார்கள். அந்த இளம் பாதிரி வெகு சீக்கிரத்தில் பணக்காரனானான்.

ஒரு நாள் தன் பழைய குருவைப் பார்க்க வேண்டுமென்று அவனுக்கு ஆசை உண்டாயிற்று. ஒரு பெரிய பரிவாரத்துடன் அவரைப் பார்க்கச் சென்றான். அவன் பழைய ஆலயத்தை அடைந்தபோது அந்த வயது முதிர்ந்த பாதிரி ஆலய வாயிலில் உட்கார்ந்து கொண்டு இருந்தார். தன் உதவிப் பாதிரி வெகு ஆடம் பரத்துடன் வந்திருப்பதைப் பார்த்து அவர் திகைப்படைந்தார். இளைஞன் தன்னை அறிமுகப் படுத்தியதும் முதிய பாதிரி ஆச்சரியத்துடன் ''மகனே! இதுகாறும் நீ எங்கு சென்றிருந்தாய், நீ வெற்றியடைந்த கதையைச் சொல்லு'' என வெகு ஆவலுடன் கேட்டார்.

''ஹா! ஹா! கிழவர்களுக்கு மூளை கிடையாது. இளைஞர்களுக்குத் தான் மூளையுண்டு; யூக சக்தியுண்டு; நாம் தனிமையாக இருக்கும்போது என் கதையைச் சொல்லுகிறேன்'' என இளைஞன் ஆர்ப்பாட்டமாய் விடையளித்தான்.

கடைசியில் இளைஞன் தன் கதையை விரிவாகக் கூறி, ''இளைஞர் களுக்குத்தான் மூளையுண்டு; கிழவர்களுக்கு மூளையில்லை'' என்று மறுபடியும் ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினான்.

உடனே அந்த முதியவர் புன்னகையுடன், ''மகனே துள்ளாதே. கிழவருக்கு மூளையில்லை யென்று சொல்லாதே. உன்னைவிட உன் மூத்தவன் இளைத்தவன் அல்ல. நீயும் நானும் வாழ்ந்த இந்தக் கோயில் – நாம் இருவரும் எத்தனையோ அற்புதங்கள் நடத்திய இந்தக் கோயில் உன் கழுதையின் தாயின் எலும்புகளின் மீதுதான் கட்டப்பட்டிருக்கின்றது'' என விடையளித்தார்.

# அறிவியலாளர்களை கொலை செய்த மதவெறி

- சந்திரன் ஒரு தெய்வம் அல்ல; அது அறிவியல் பார்வையில் ஒரு கோள்! சந்திரன் மீது பூமியின் நிழல்படுவதே (கிரகணம்) என்று கூறினார், கி.மு. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிவியலாளர் ஆனக்ஸாகரஸ். ஏதன்சு நகரத்து மதவாதிகள் இவரது கருத்து மத விரோதமானது என்று கூறி இவரைக் கொல்ல முயன்றனர். ஏதன்சு நகர மன்னர் பெரிக்ளீஸ் இவரது நண்பராக இருந்ததால், கொலை முயற்சி தடுக்கப்பட்டது. இவரை ஏதன்சு நகரை விட்டே துரத்தி விட்டனர்.

- சூரியன் தான் இயங்குகிறது என்ற மத நம்பிக்கைக்கு மாறாக, சூரியனைச் சுற்றி பூமிதான் இயங்குகின்றது என்ற உண்மையை வெளியிட்டார், கோபர்நிகஸ். மதவாதிகள் கடுமையாக எதிர்த்தனர்; கலகம் செய்தனர். புராட்டஸ்டண்ட் மதத்தை நிறுவிய மார்ட்டின் லூதர், கோபர்நிகசை 'முட்டாள்!' என்று கூறி இழிவுபடுத்தினார். எதிர்ப்புக்காக தனது முடிவை விட்டுக் கொடுக்காத கோப்பர்நிகஸ், படுத்த

படுக்கையாக கிடக்கும் போதும் தனது கொள்கைகளை நூலாக வெளியிட்டுப் பரப்பினார்.

- விண்வெளியில் விண்கோள்களின் இயக்க விதிகளைக் கூறியவர், அறிவியல் அறிஞர் யோவான் கெப்ளர். இவரது கருத்தை மதத்துக்கு எதிரானது என்று கூறி கண்டித்தனர். இவர் சில காலம் பேரரசர் அவையில் கணித வல்லுனராக இருந்தார். அதனால் அவரை நேரிடையாக எதிர்க்க முடியாததால், 75 வயதான இவரது தாயார் காத்தரீனா கெப்ளரை, தன் மகனுக்கு இவர்தாம் மதவிரோதக் கருத்தினைச் சொல்லிக் கொடுத்தார் என்று குற்றம்சாட்டி, அவரைக் கைது செய்து இரும்புச் சங்கிலிகளால் கை கால்களைப் பிணைத்து, இருட்டுச் சிறைக் கிடங்கில் தள்ளிப் பூட்டி அடைத்துச் சித்திரவதை செய்தனர். 14 மாதங்கள் இவ்வாறு சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டார். எனினும் அவர், தான் குற்றவாளி என்று ஒப்புக் கொள்ளவே இல்லை. இறுதியில் கெப்ளரின் தாயாரை ஊரைவிட்டு வெளியேற்றி, மீண்டும் நகர் திரும்பக் கூடாது என்று கூறி துரத்தி விரட்டினர்.

- கோப்பர்நிகஸ் கூறிய கோள்களைப் பற்றிய கொள்கையை உண்மை தான் என்று கூறியதற்காகவும், தமது புரட்சிகரமான கருத்து களுக்காகவும் சித்ரவதையை அனுபவித்தவர் இத்தாலி நாட்டு அறிஞர் ஜியார்டனோ புருனோ! இவரை எட்டாண்டு காலம் சிறைக்குள் அடைத்து, பின் நீதிமன்றத்தில் நிறுத்திக் குற்றம் சாட்டி, மத விரோதி என்று கூறி மன்னிப்புக் கேட்கக் கூறினார். புருனோ மன்னிப்புக் கேட்க மறுத்தார். இவரைச் சுட்டுப் பொசுக்கிக் கொல்ல வேண்டும் என்று நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டு ரோமாபுரி நகரின் முக்கிய சதுக்கத்தில் ஒரு கம்பத்தில் கட்டிவைத்து நெருப்பிட்டு உயிருடனே கொளுத்திக் கொன்றனர்.

- ‘‘நமது பூமி, பேரண்டத்தின் நடுநிலையில் உள்ள ஒன்று அன்று; அது சூரியனைச் சுற்றி வருகின்றது’’ என்ற கருத்துக்களை வெளியிட்டதற்காக கலிலியோவை ரோம் நகரத்து மதவாதிகள் சிறையிலடைத்தனர். சித்திரவதை செய்தனர். பைபிளில் கூறியதற்கு மாறான கருத்தைக் கூறிய மாபாவி என்று குற்றம்சாட்டப்பட்டு மத

நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார். ''தமது கொள்கை தவறு என்று ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும், இன்றேல் உயிரிழக்க வேண்டி வரும்'' என்றும் தீர்ப்பளிக்கப்பட்டார். முதுமையின் கோலத்தாலும், உடல் நலிவாலும் தனது கொள்கைகள் தவறு என்று முழந்தாளிட்டு மன்னிப்பு வேண்டிக் கர்த்தரை மன்றாட வேண்டிய இக்கட்டுக்கு ஆளானார். எனினும் இவர் நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்தவுடன், ''நீதிமன்றத்தினருக்காக உண்மை மாறி விடாது; பூமி தான் சூரியனைச் சுற்றி வருகின்றது'' என்று கூறினார். எனவே இவரை மீண்டும் கொடுமைப்படுத்தினர். கண் பார்வை இழந்த நிலையிலும் இவரை வீட்டுச் சிறையிலே சாகும் வரை வைத்திருந்தனர். இவர் இறந்த பின் நினைவுச் சின்னம் எழுப்பக்கூட அரசு அனுமதிக்கவில்லை.

- ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த செர்வீடஸ் இரத்தம் இதயத்திலிருந்து நுரையீரல்களுக்கு எப்படிச் செல்கிறது என்பதை மனித உடலைக் கீறி, தேடிப் பார்த்து அந்தப் பாதையைக் கண்டுபிடித்தார். ஆனால் மனித உடலைக் கீறியது மத விரோதம் என்றுக் கூறி அவரை கம்பத்தில் கட்டி வைத்து உயிருடன் கொளுத்திக் கொன்றனர்.

- உயிர் இயல் அறிஞர் டார்வின் – மனிதன் – பரிணாம வளர்ச்சியை அறிவியல் ரீதியாக ஆய்ந்து வெளியிட்டார். கடவுள்தான் மனிதனை படைத்தான் என்ற படைப்புக் கொள்கையை அடியோடு அறிவியல் மறுத்ததால் மதவாதிகளின் கடும் எதிர்ப்புக்கும், இழிமொழிக்கும் அவர் ஆளானார். பிற்போக்குவாதிகள் அவரை, ''மனிதனை விலங்கு நிலைக்குக் கீழே தள்ளிவிட்டார்'' என்று கூறிக் கண்டித்தனர்.

- சிக்மண்ட் பிராய்ட் எனும் அறிஞர் உளவியல் பிரச்சினைகளை அறிவியல் மூலம் ஆராய்ந்தார். அவரை மனிதனின் ஆன்மாவை அழித்துக் கொள்ளை கொண்ட பாதகன்'' என்று வசைபாடினர் மதவெறியர்.

- இப்படி கொடுமையை சந்தித்தவர்கள் அறிவியல் அறிஞர்கள் மட்டுமல்ல; தத்துவ ஞானிகளும், சிந்தனையாளர்களும் இதனைச் சந்தித்துள்ளனர்.

- சிந்திக்கத் தூண்டிய 'குற்றத்துக்காக' சாக்ரடீஸ் நச்சுக் கோப்பையை பரிசாகப் பெற்று உயிர்நீத்தார்.

பெரியார், "அறியாமை, நிறைந்த நம் மக்கட் சமுதாயத்துக்கு அறிவுச் சுடரைக் கொளுத்தியதற்காக" அவர் வாழ்வில் சந்தித்த கொடுமைகள் ஏராளம்! இழிமொழிகள், கல்லடி, செருப்பு, பாம்பு, அழுகல் பொருள்கள், மலம் வீச்சு, செருப்புத் தோரணம் கட்டி இழிவுபடுத்துதல், கழிவுப் பொருள்களைப் பார்சலில் அனுப்புதல், ஆபாச வார்த்தைகளைக் கொட்டி கடிதம் எழுதுதல், பொதுக் கூட்டத்தில் பன்றி, மாடு, பாம்பு, கழுதைகளை விட்டு பீதி கிளப்பி விடுதல், பொய் வழக்குப் போடுதல், அபராதம், சிறை, சொத்து ஏலம், கொலை முயற்சி, குடும்பத்தாரை அவதூறு பேசுதல் என்று எண்ணிறந்த கொடுமைகளை ஏற்றும், தந்தை பெரியார், தனது கொள்கையிற் பின்வாங்கினார் இல்லை.

## கிரகங்களிலும் ஜாதி

*கிரகங்களைப் பற்றிய ஜோதிடர்களின் கற்பனைக்கு எல்லையே இல்லை. கிரகங்களை ஆண், பெண் என்று மட்டுமல்ல 'அலி' என்றுகூட வகைப்படுத்தியிருக்கிறார்கள். என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? ஆனாலும் அது நிஜமே. சூரியன், செவ்வாய், குரு ஆண்கள்! சந்திரன், சுக்ரன், ராகு பெண்கள்! புதன், சனி, கேது 'அலி'கள்! மனிதர்களைப் போல் கிரகங்களைப் பாவிக்க ஆரம்பித்து விட்டால் பிறகு சகல கல்யாண குணங்களையும் கொடுத்துவிட வேண்டியது தானே. எந்தக் கிரகம் உயரம், குட்டை, சமம்? எது வெள்ளை, கருப்பு, மஞ்சள், சிவப்பு, பச்சை? எது எதற்கு என்ன உடை–வாகனம் யாது? என்றெல்லாம் பட்டியலிட்டிருக்கிறார்கள். அவ்வளவு ஏன் சாதிப் பாகுபாடுகூட வகுத்து விட்டார்கள்!*

*குரு, சுக்ரன் – பிராமண ஜாதி; சூரியன், செவ்வாய் – ஷத்திரிய ஜாதி; சந்திரன், புதன் – வைசிய ஜாதி; சனி – சூத்திர ஜாதி; ராகு, கேது – சங்கிரம ஜாதி – என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.*

*படுமோசமான கிரகம் என்றும், ஏழரை நாட்டுச் சனி என்றும் கூறப்படும் கிரகத்தை 'சூத்திர' சாதி என்று அழைத்திருக்கிறார்கள் பாருங்கள். அங்கே வர்ணாஸ்ரம ஒடுக்குமுறையும் உயர்சாதி வெறியும் அப்பட்டமாய் வெளிப்பட்டிருப்பதைக் காணலாம்.*

**– பேராசிரியர் அருணன் நூலிலிருந்து**

# வாட்டி வதைக்கும்
# 'வாஸ்து' நம்பிக்கை

'வாஸ்து' நம்பிக்கை, இப்போது படித்தவர்கள், அரசியல்வாதிகள், மேல்மட்டத்தினரிடம் வேகமாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. அரசியல் கட்சித் தலைவர்கள், இப்போதெல்லாம் மக்களை நம்புவதைவிட யாகங்களையும் வாஸ்துக்களையும், சோதிடர்களையும் நம்பத் துவங்கிவிட்டனர். இந்த ஆலோசகர்களின் ஆலோசனையைப் பின்பற்றினால், மக்கள் ஆதரவு கிடைத்துவிடும் என்று நம்புகிறார்கள்.

சென்னை கடற்கரைச் சாலையில் கையில் சிலம்புடன் ஆவேசத்துடன் நீதி கேட்கும் கண்ணகி சிலை, கடந்தகால அ.இ.அ.தி.மு.க. ஆட்சியால் 2002இல் அகற்றப்பட்டது. போக்குவரத்துப் பிரச்சினைதான் காரணம் என்று பொருந்தாத ஒரு சமாதானம் சொல்லப் பட்டாலும், 'வாஸ்து' நம்பிக்கையின்படிதான் அது அகற்றப்பட்டது என்று செய்திகள் வந்தன. தமிழக முதலமைச்சர் அந்த வழியாகக் கோட்டைக்குச் செல்ல வேண்டியிருக் கிறது. வாஸ்து சாஸ்திரத்தின்படி இப்படி ஒரு சிலை நிற்பது முதலமைச்சருக்கு நல்லது அல்ல என்று சில வாஸ்து பண்டிதர்கள் கூறியதால், சிலை

அகற்றப் பட்டதாகக் கூறப்பட்டது. இந்தியாவில் பிரதமர்கள், முதலமைச்சர்கள், தலைவர்கள், உயர் அதிகாரிகள், இந்த வாஸ்து மூடநம்பிக்கையில் மூழ்கிப் போய் மக்கள் வரிப் பணத்தைப் பாழாக்கி, தங்கள் அலுவலகக் கட்டிடங்களை இடித்து, மாற்றிக் கட்டி வருகிறார்கள்.

மறைந்த என்.டி.ராமாராவ், ஆந்திர முதலமைச்சராக இருந்தபோது ஒரு சம்பவம் நடந்தது. அதுவும் இதேபோல் முதலமைச்சர் கடந்து செல்லும் பாதை தொடர்பானதுதான். வாஸ்து சோதிடக்காரர்கள் முதலமைச்சர் என்.டி.ராமாரா வுக்கு சொன்ன ஆலோசனைப்படி, அவர் அலுவலகத்துக்குச் செல்லும் வடக்குப் பகுதி சாலையின் நீளம் நீட்டிக்கப்பட்டது. இந்தச் சாலை நீட்டிப்புக்காக, அப்பகுதிகளில் குடிசைப் போட்டு வாழ்ந்து கொண்டிருந்த ஏழை மக்களுக்கு, பல கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கிக் காலி செய்ய வைத்தது. 'வாஸ்து சாஸ்திரப்படி' ஒரு குறிப்பிட்ட மீட்டர் எண்ணிக்கையில் சாலை உருவாக்கப்பட்டது. விளைவு என்ன? என்.டி.ராமாராவ் ஆட்சி கவிழ்க்கப் கூஷபட்டதுதான்.

தேவகவுடா பிரதமராக இருந்தபோது ஒரு சம்பவம். அவரது பிரதமர் வீடு, அப்போதுதான் பல இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு இருந்தது.

ஆனாலும், வாஸ்து சோதிடர்கள், அவரது வீட்டின் நுழைவு வாயிலில் இரண்டு படிக்கட்டுகள் மட்டுமே இருப்பதை மாற்ற வேண்டும் என்றும், இல்லையேல், அவர் பதவிக் காலம் முழுவதிலும் பதவியில் இருக்க முடியாது என்றும் யோசனை தெரிவித்தனர். அவசர அவசரமாக, வாயிற்பாதை உடைக்கப்பட்டு, மூன்றாவது படியுடன் புதிய வாசல் வழி அமைக்கப்பட்டது. ஆனால், தேவகவுடாதான் பதவியில் நீடிக்க முடியவில்லை.

மனிதன் முதலில் குகையில் வாழ்ந்தான். பிறகு மரங்களையும், தழைகளையும் பயன்படுத்தி குடியிருப்புகளை உருவாக்கினான். பிறகு கல், மண், மரங்களைப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டான். இப்போது நவீன கட்டுமானங்கள் வந்துவிட்டன. செங்கல், இரும்பு, மரம், பளிங்கு, கல் போன்றவை பயன்பாட்டுக்கு வந்துவிட்டன. தான் வாழ்கிற தட்ப வெப்ப நிலைகளுக்கு ஏற்ப, வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. வாஸ்து சாஸ்திரம் பற்றி மத்ஸ்ய புராணம், கந்த புராணம், அக்னி புராணம் போன்ற பல்வேறு புராணங்களிலும் பேசப்படுகின்றன. வேதங்களிலும் இது பற்றிய செய்திகள்

வருகின்றன. விஞ்ஞானம் முழுமையாக வளர்ச்சி அடையாத காலகட்டத்தில், அவை மதங்களைச் சார்ந்தே நிற்க வேண்டியிருந்தது. வளர்ந்து கொண்டிருக்கிற விஞ்ஞானம், இப்போது மதங்களைச் சார்ந்து நிற்க வேண்டிய அவசியமற்ற நிலைக்கு வந்துவிட்டது. மத நம்பிக்கைகள் பலவும் விஞ்ஞானத்தால் மூட நம்பிக்கைகள் என்று நிரூபிக்கப்பட்டுவிட்டன. கட்டுமானத் துறையிலும், விஞ்ஞானம் வந்துவிட்ட பிறகு, 'வாஸ்து' நம்பிக்கைகளைப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

வாஸ்துவில் 'வர்ணாஸ்ரமம்' நுழைந்திருக்கிறது என்பது பலருக்கும் வியப்பாக இருக்கலாம். ஆனால் உண்மை. விஷ்வகர்மா பிரகாஷிக்கா எனும் சாஸ்திர நூல், வீட்டு மனைகளை வெள்ளை, சிவப்பு, மஞ்சள், கருப்பு என்று மண்ணின் அடிப்படையிலும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கிறது. இதில் வெள்ளை 'பிராமணர்'களுக்கும் சிவப்பு சத்திரியர்களுக்கும், மஞ்சள் வைசியர்களுக்கும், கருப்பு சூத்திரர்களுக்கும் நல்லது என்று பரிந்துரைக்கிறது. வேத வியாஸ் என்ற ஒரு பார்ப்பன அய்.ஏ.எஸ். அதிகாரி, 'வாஸ்து'வைப் பற்றி எழுதிய ஒரு நூலில், இந்த வர்ணாஸ்ரமப் பிரிவை நியாயப்படுத்தி எழுதியிருக்கிறார். இத்தகைய மனநிலையில் உள்ள அதிகாரிகள், மக்களுக்கு எப்படிநியாயம் வழங்குவார்கள்?

வாஸ்துவின் பலன் – வீட்டின் உரிமையாளர்க்குப் போய்ச் சேருமா? அல்லது குடியிருப்போருக்குப் போய்ச் சேருமா என்பதில் வாஸ்து பண்டிதர் களுக்குள்ளே ஒருமித்த கருத்து கிடையாது. இந்தக் குழப்பத்துக்குக் காரணம் உண்டு. வாஸ்து சாஸ்திரம் எழுதப்பட்ட காலங்களில் வீடுகளை வாடகைக்கு விடும் வழக்கமே கிடையாது. வீட்டின் உரிமை யாளர்கள்தான் வீடுகளில் இருந்தார்கள். எனவே, வாஸ்துகளின் பலன் உரிமையாளர் களுக்குத்தான் சொல்லப்பட்டது. இப்போத வீடுகள் வாடகைக்கு விடப்படும் காலம். இப்போது வாஸ்து பண்டிதர்கள் தங்கள் பிழைப்பை விரிவுபடுத்த, குடியிருப் போருக்கும் அதன் தாக்கம் இருக்கும் என்கிறார்கள். வேறு சிலர் இதை மறுக்கிறார்கள். வாஸ்து சாஸ்திரத்துக்கு எதிரானதாகக் கட்டப்பட்ட வீடுகளில் குடியிருப்போருக்கு பல சங்கடங்கள் ஏற்படுவதாக, ஒரு சில சம்பவங்களைச் சுட்டிக் காட்டி, வாஸ்துவை விஞ்ஞானம் என்று பரப்ப முயற்சிக்கிறார்கள். இந்த வாஸ்து சாத்திரங்கள் காலத்துக்கு ஒவ்வாதவை என்பதற்கு சில இதோ சில உதாரணங்கள்:

ஸ்ரீநேசமணி ஸ்ரீராம சாஸ்திரி என்ற பிரபல வாஸ்து பண்டிதர் ‘கிரஹவாஸ்து’ என்று தெலுங்கில் ஒரு நூல் எழுதியிருக்கிறார். வீட்டின் முன் வாசலுக்கு எதிரே நீர் ஓட்டம் இருந்தால், அந்த வீட்டில் பணச் செலவு மிக அதிகமாக இருக்கும். உணவுப் பொருள்கள் வீண்விரயமாகும் என்றும் எழுதி யிருக்கிறார்.

இப்போது நவீன குடியிருப்புகளிலும் வீட்டுக்கு முன் தான் – பூமிக்கடியில் தண்ணீர் குழாயும், சாக்கடை ஓடுவதற்கான குழாய்களும் அமைக்கப்படுகின்றன. இந்த வீடுகள் எல்லாவற்றிலுமே, வீண் விரயச் செலவுகளும், உணவுப் பொருள்கள் நாசமும் நடப்பதாக நாம் முடிவுக்கு வந்துவிட முடியுமா?

அதேபோல் வீட்டு வாசல் கதவுக்கு முன்னால் தூண்களோ, கம்பமோ இருந்தால், வீட்டில் உள்ள பெண் கெட்டவளாகவோ அல்லது நன்னடத்தை இல்லாதவளாகவோ இருப்பாள் என்றும் அந்நூல் கூறுகிறது. இதற்காக வீட்டின் முன் மின்சாரத் துறையோ, தொலைபேசித் துறையோ அமைக்கும் மின் கம்பங்களை எல்லாம் அகற்றிட வேண்டும் என்று சொல்ல முடியுமா?

அப்படிப்பட்ட வீடுகளில் உள்ள பெண்கள் எல்லாம் நடத்தைக் கெட்டவர்கள் என்று கூறிட முடியுமா? அந்தப் பெண்கள், இந்த நூலின் மீது இந்த அவமதிப்புக்காக நீதிமன்றத்தில் வழக்குக்கூட தொடர முடியும்.

வீட்டுக்கு முன் மரம் நிற்பதுகூட மகனின் மரணத்துக்கும், பல் வலிக்கும் காரணமாகிவிடும் என்கிறது இந்நூல். சாலை ஓர மரங்களை எல்லாம் வெட்டிவிட வேண்டியதுதானா? இந்த மரங்களால் எவ்வளவோ பயன் கிடைக்கிறதே! வீட்டுக்கு எதிரே மரங்கள் நிற்பதால் ஏற்படக் கூடிய 16 கேடுகளை இந்நூல் பட்டியலிட்டுள்ளது. இதுதான் வாஸ்து சாஸ்திரம் என்றால் இதைவிட வேறு அபத்தம் இருக்க முடியுமா?

1981ஆம் ஆண்டு அக்டோபர் 3ஆம் தேதி அய்தராபாத் நகரத்தில் பஞ்சக்குட்டா எனும் பகுதியில் கட்டப்பட்ட அடுக்குமாடிக் கட்டிடம் சரிந்து விழுந்தது. அப்போது யாரும் குடிவரவில்லை. எனவே உயிர்ச்சேதம் இல்லாமல் போய்விட்டது. பொறியாளர்கள் சரியாகக் கட்டவில்லை என்று சிலர் கூறினார்கள். இன்னும் சிலர் கட்டிடம், வாஸ்து சாஸ்திரப்படி அமையாதது தான் காரணம் என்றார்கள். பத்திரிகையாளர்கள் விசாரித்த போது தான், ஒரு அதிர்ச்சியான உண்மை வெளி வந்தது. ‘வாஸ்து சாஸ்திரத்தில்’ சர்வதேச புகழ் வாய்ந்தவராக சொல்லப்படும் பி.என்.ரெட்டி என்பவர்தான்

இந்த கட்டிடத்துக்கு திட்டமிட்டு, வரைபடம் தயாரித்திருக்கிறார். வாஸ்து சாஸ்திரத்தில் ஊறிப் போன சர்வதேச புகழ் பெற்ற நிபுணரால் உருவாக்கப்பட்ட கட்டிடமே, கட்டியவுடன் இடிந்து விழுந்து விட்டதற்குக் காரணம். என்ன? இதுதான் வாஸ்துவின் மகிமையா? சக்தியா?

வாஸ்து சாஸ்திரம் – உலகம் முழுமைக்கும் பொருந்தக் கூடியது என்றும், எல்லா நாட்டினரும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்றும் வாஸ்து பண்டிதர்கள் கூறுகிறார்கள். இது உண்மையல்ல. உலகின் பல நாடுகளில் கட்டப்படும் பல அடுக்குக் கட்டிடங்கள் வாஸ்து சாஸ்திரத்துக்கு எதிராகவே கட்டப்பட்டுள்ளன. அவைகள் எல்லாம் உறுதியான கட்டிடங்களாகவே இருக்கின்றன. மக்களும் மகிழ்ச்சியோடு அனைத்து அடிப்படை வசதிகளோடு தான் வாழ்கிறார்கள். இவை எல்லாம் தெரிந்தும்கூட, வாஸ்து பண்டிதர்கள், உலக நாடுகளைத் துணைக்கு அழைத்துக் கொண்டு, பொய்யைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

சென்னை நகரில் கடந்த ஆண்டு செம்பரம்பாக்கம் ஏரியை திறந்து விட்டதால் பல பகுதிகளில் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின. 'வாஸ்து' பார்த்து கட்டிய வீடுகளும் அதில் ஏராளம் உண்டு. அந்த வீட்டுக்குள்ளும் வெள்ளம் புகுந்தது; தப்பவில்லை. குஜராத் பூகம்பத்தில் வீடுகள் பகுதி பகுதியாக சரிந்து வீழ்ந்தன. வாஸ்து பார்த்து கட்டிய வீடுகள் தப்பிவிடவில்லை. சென்னை 'மவுலிவாக்கம்' அடுக்குமாடி குடியிருப்பு இடிந்த விழுந்தது அல்லவா? அந்த வீடுகளும் வாஸ்து பார்த்து கட்டியவைதான்.

வீடுகள் பயன் கருதி கட்டப்பட வேண்டும். வாஸ்து சாஸ்திரம் கழிவறைகள் கட்டுவதையே அனுமதிக்கவில்லை. அறைகளுக்குள்ளே கழிவறை வசதியுடன் (அட்டாச்சிடு பாத்ரூம்) வீடு கட்டுவதற்கு எந்த வாஸ்து சாஸ்திரம் அனுமதிக்கிறது?

## ஊதுவத்தியின் ஆபத்து

*வாரத்திற்கு ஒரு நாளைக்கு மேல் ஊதுவத்தியை உபயோகித்து அதிலிருந்து வெளிவரும் நறுமணப் புகையை முகர்வதால் இரத்தப் புற்றுநோய் உண்டாகலாம் என்கிறது அமெரிக்காவிலுள்ள தென் கலிபோர்னியா பல்கலைக்கழக அறிவிப்பு ஒன்று! ஊதுவத்திப் புகையில் பென்ஸோபைரின் ஹைட்ரோ கார்பன் போன்ற நச்சு வாயுக்கள் வெளியேறு கின்றன. இதனால் மூச்சுக் குழலில் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது என்கிறது இந்த அறிவிப்பு.*

# தீ மிதிப்பது பக்தியாலா?

தீயில் மனிதன் நடப்பது என்பது 'கடவுள் செயல்' என்றும், கடவுள் மீது உள்ள பக்தியின் காரணமாகவே நடக்க முடிகிறது என்றும் மக்கள் நம்பினார்கள். மதவாதிகள் தங்கள் மதத்தைப் பரப்ப இம்முறையைத் தங்கள் மத விழாவாகப் பயன்படுத்தினார்கள். இம்முறை இந்தியாவிலும், மலேசியா விலும் நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில், பரவலாக இந்துக்களும், சில இடங்களில் முகமதியர்களும் தீமிதி விழாக்களை நடத்துகிறார்கள்.

**தீ குழியின் அமைப்பு :** தீ குழியின் அளவு ஒவ்வொரு இடத்திலும் மாறுபட்டிருக்கும். சராசரியாக 15 அடி நீளமும், 5 அடி அகலமும், 2 அடி உயரமும் உடையதாக இருக்கும். பாற்குழி ஒன்று இருக்கும். (பசு அல்லது வெள்ளாட்டின் பால் நிரப்பப்பட்ட சிறிய குழி) முதலில் பெரிய பெரிய மரக்கட்டைகளை எரிய விடுகிறார்கள். அந்த மரக்கட்டைகள் எரிந்து தணல் கட்டிகளாக ஆன பின்னால் இரண்டு மூன்று பேர் நீளமான மூங்கிற் குச்சிகளைக் கொண்டு தணல் கட்டிகளைக் குத்தி உடைத்து தீ குழி முழுவதும் பரப்பி மட்டமாக்கி விடுவார்கள். பெரிய தட்டிகளைக் கொண்டு (விசிறி போல்) தணல் கட்டிகள் மீது விசுறுவார்கள். அப்போது தணல் கட்டிகள் மீது பூக்கும் சாம்பல்

நீக்கப்படுகிறது. இப்படி அடிக்கடி விசுறுவார்கள். பின்னர் ஒவ்வொருவராக தணல் கட்டிகள் மீது வேகமாக நடந்து (ஓடி) சென்று பாற்குழியில் கால்களை நனைத்துக் கொள்வார்கள். அப்போது பலருக்கு கால்கள்தீயவோ, கொப் புளிக்கவோ இல்லாததால் அதற்கு கடவுள் பக்திதான் காரணம் என்ற பெரும்பாலோர் நம்புகின்றனர். அறிவியல் கண் கொண்டு ஆராய முன்வந்த மேல் நாட்டாருக்கும் சமீபகாலம் வரை இந்நிகழ்ச்சி பெரும் புதிராகவே இருந்தது.

**கோவூரின் ஆராய்ச்சி :** இலங்கை பகுத்தறிவாளர் கழகத் தலைவர் டாக்டர் டி. கோவூர், தீ மிதியின் தத்துவத்தை ஆராய்ச்சி மூலம் மெய்ப் பித்துக் காட்டினார். இலங்கை மருத்துவப் பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழாவின்போது மாணவர்கள் மத்தியில் ஒரு தீ குழி அமைத்து ஆராய்ந்தார். கடவுள் பக்தி இல்லை என்பதைக் காட்டுவதற்காக மாணவர்கள் கைகளில் மதுப்பாட்டில்களையும் சிகரெட்டுகளையும் கோழிகளையும் கொடுத்து நெருப்பின் மேல் வேகமாக நடக்கச் செய்தார். வேகமாக நடந்தவர்களுக்குக் கால்கள் தீயவில்லை. ஆனால் சிறிது மெதுவாக நடந்தவர்களுக்கு சிறிது சுடச் செய்தது. வேகமாக நடந்தவர்கள் தங்களுடைய கால்களை நெருப்பின் மேல் வைத்து எடுக்க, எடுத்துக்கொண்ட நேரம் அரை வினாடிக்கும் குறைவு. ஆனால் அரை வினாடிக்கும் அதிகமான நேரத்தை எடுத்துக் கொண்டு நடந்தவர் களுக்கே கால் சுடச் செய்தது. ஆகவே மனிதப் பாதங்களின் அடித்தோலுக்கு சராசரியாக அரை வினாடி நேரம் நெருப்பின் வெப்பத்தைத் தாங்கும் சக்தி உண்டு என்பதையும் அதுவரை மனித உடலில் வெப்பம் தாக்குவ தில்லை என்பதையும் நிரூபித்துக் காட்டினார்.

**சோதனை 1 :** தீ மிதிக்கும் தத்து வத்தை எளிய சோதனைகள் மூலம் அறியலாம். சுவாலையுடன் எரியும் விளக்கு அல்லது மெழுகு வர்த்தியில் சுவாலையின் நுனி பாகத் திற்கு மேல் நமது உள்ளங்கையை வேகமாக அசைத்தால் தீ சுடுவதில்லை. ஆனால் வேகத்தை சிறிது சிறிதாகக் குறைத்துக் கொண்டு வந்தால் சுட ஆரம்பிக்கிறது. இந்த அடிப்படையில் தான் நெருப்பில் வேகமாக நடக்கும் போது கால்கள் சுடுவதில்லை என்பதையும், வேகம் குறையும்போது கால்கள் தீய்க்கச் செய்கிறது.

**சோதனை 2 :** நமது வீடுகளில் தாய் மார்கள் சமையல் செய்யும்போது அடுப்பிலிருந்து வெளியில் விழும் நெருப்புக் கட்டிகளை கையால் எடுத்து

மீண்டும் அடுப்பில் போடு வதை நாம் பலமுறை பார்த்திருக் கிறோம். ஆனால் அவர்கள் சூடேறிக் காய்ந்துவிட்ட பாத்திரங்களையோ பழுத்துப்போன இரும்புச் சட்டிகளையோ வெறுங்கையால் எப்போதும் எடுக்க முற்படுவதில்லை. இதிலிருந்து நெருப்பின் மேல் நடத்தலில் உள்ள மர்மத்தை அறியலாம். வெப்பத்தால் பழுப்பேறிய உலோகம் அல்லது கற்களைப்போல வெறும் கட்டைகளாலான தணல் வெப்பத்தைக் கடத்துவதில்லை. தணல் ஒரு குறைந்த வெப்பக் கடத்தி. அதனால்தான் தீ மிதி விழா நடத்துபவர்கள் மரக்கட்டைகளைப் பயன்படுத்துகிறார்கள். குழியில் உள்ள கற்களை அப்புறப்படுத்துகிறார்கள்.

தீ குண்டத்தில் நெருப்பின் மீது அடிக்கடி விசுறுகிறார்கள் என்று முன்பு குறிப்பிட்டோம். அவ்வாறு செய்யாத போது சாம்பல் படிய ஆரம்பிக்கும். அப்போது அதை உணராமல் அதில் இறங்கி நடக்கும் போது, வெப்பமான சாம்பல் பாதங் களில் ஒட்டிக் கொள்கிறது. பாதங்களில் ஒட்டிக் கொண்ட சாம்பல் குறிப்பிட்ட வினாடி நேரத்திற்கு மேல் பாதங்களில் இருப்பதால் வெப்பம் உடலில் ஊடுருவ ஆரம்பித்து கொப்புளங்கள் ஏற்படுகின்றன.

**உண்மை அறிய :**

1. தணல் கட்டிகளில் நடப்பவர்கள் நெருப்பைக் கொழுந்துவிட்டு எரியச் செய்து அந்தத் தீச் சுவாலைகளின் மத்தியில் ஏன் இறங்கி நடக்கக் கூடாது?

2. தீ குண்டத்தில் நடப்பவர்கள் ஏன் சற்று நேரம் படுத்து உருண்டு காட்டக் கூடாது?

3. மரத்தை எரித்து நெருப்புக் கட்டிகள் மீது நடப்பவர்கள் ஏன் பழுக்கக் காய்ச்சிய உலோகத் தகடுகள் மீது நடக்கக் கூடாது?

4. நெருப்பில் பூக்கும் வெப்பமான சாம்பல்மீது ஏன் நடந்துகாட்டக் கூடாது என்று கேட்பார்களானால் தீ மிதிப்பதில் உள்ள அறிவியல் உண்மை வெளிப்படும்.

# 'பேய்' உண்டா?
# சவால் விட்டவர்கள் ஓட்டம்

திருச்சி மாவட்டம் தாத்தையங்கார் பேட்டை ஒன்றியம் கோளம்பட்டி கிராமத்தில் சோழ ராஜா கோயில் இருக்கிறது. ஆடி மாதத்தில் மூன்று நாள்கள் நடக்கும் இந்தக் கோயில் திருவிழாவில் கொடூரமான சித்திரவதைகள் அரங்கேறுகின்றன. பேய் பிடித்ததாகக் கூறப்படும் பெண்களைக் கொண்டு வந்து நிறுத்தி, முகத்தில் தண்ணீரைத் தெளித்து, சாம்பிராணி புகைப் போட்டு, 'உனக்கு பேய் பிடித்திருக்கிறது. அது எந்த ஊர் பேய்?'' என்று கேட்டு சாட்டையால் இரத்தம் சொட்ட சொட்ட அடிக்கிறார்கள். அடி தாங்க முடியாத பெண்கள், 'பேய் ஓடி விட்டது' என்கிறார்கள். அந்தப் பெண்ணின் தலை முடியை எடுத்து ஓர் ஆணியில் சுற்றி அப் பகுதி புளிய மரத்தில் அடிக்கிறார்கள்.

பேயைப் பற்றி காசார் பிரைட் என்ற பிரிட்டனைச் சார்ந்தவர் ஓர் ஆய்வை நடத்தினார். 800 வருட பழமையான பங்களா ஒன்றில் 'பேய் பிசாசு' பிடித்தவர்கள் என்று கூறப்பட்டவர்களை கொண்டு போய் தங்க வைத்து, அவர் ஆய்வு செய்தார். குறிப்பிட்ட இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது வழக்கத்துக்கு அதிகமான 'காந்தப் புலன்' ஏற்படுவதும் மூளை நரம்பு களின் பாதிப்புகளுமே இதற்குக் காரணம் என்று அவர் கண்டறிந்தார்.

2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 'கலைஞர்' தொலைக்காட்சியில் 'ஆவி–பேய்' குறித்து விவாத நிகழ்ச்சி ஒன்று நடந்தது. திருநங்கை ரோஸ் நடத்திய நிகழ்ச்சி அது. 'பேய் இருப்பது உண்மை' என்று ஒரு அணியும், மறுப்பாளரும் வாதிட்டனர்.

"பேய் இருப்பது உண்மையானால் அதை எங்கள் மீது ஏவி விடுங்கள் பார்ப்போம்" என்று சுரேந்தர் என்பவர் சவால் விட்டார். "சுரேந்தர் மீது பேயை ஏவி விட்டு அவருக்கு கேடுகளை உருவாக்கிக் காட்டினால் 10 இலட்சம் ரூபாய் தரத் தயார்" என்று சந்திரசேகர் என்பவர் பேய் ஓட்டும் 'மந்திரவாதி களுக்கு' சவால் விட்டதோடு, அங்கேயே ரூ.10 இலட்சத்துக்கான காசோலை யையும், பின் தேதியிட்டு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரிடம் வழங்கினார்.

"ஒரு மாதத்துக்குள் பேயை ஏவி விடுகிறேன்" என்று சசிகுமார் என்பவர் சவாலை ஏற்றார். ஒரு மாதத் கெடு முடிந்தது. மீண்டும் அதே நிகழ்ச்சியில் தோழர் சுரேந்தர் தனது துணைவியாருடன் மகிழ்ச்சியாக நிகழ்ச்சிக்கு வந்தார். 'பேயை' ஏவிவிடுவதாக சவால்விட்ட சசிகுமார், அய்யப்ப பக்தர் கோலத்தில் நிகழ்ச்சிக்கு வந்தார். இருவரும் நேரடியாக விவாதித்தனர். 'பேயை' நம்பும் தரப்பினர் தங்களது தோல்வியை நிகழ்ச்சியில் ஒப்புக் கொண்டனர்.

இதேபோல் 'விஜய்' தொலைக் காட்சியில், 'நீயா, நானா?' நிகழ்ச்சியிலும் ஒரு மந்திரவாதி, 'பில்லி சூன்ய'த்தை ஏவி அதை நம்ப மறுத்த ஒருவரை ஒரு மாதத்தில் மரணமடையச் செய்வதாக சவால் விட்டார்.

சவாலை ஏற்றுக் கொண்டவர் ஒரு மாதம் கழித்து மீண்டும் நிகழ்ச்சிக்கு வந்து உயிருடன் நலமுடன் இருப்பதை உறுதிப்படுத்தி, மந்திரவாதியின் முகத்திரையைக் கிழித்தார்.

### சோதிடம் பொய் : 186 விஞ்ஞானிகள் கூட்டறிக்கை

*"மக்களின் வாழ்க்கைக்கும், கிரகங்களுக்கும் தொடர்பு உண்டு என்றும், கிரகங்கள் மூலம் எதிர்காலத்தைக் கணிக்க முடியும் என்றும் கூறப்படுவதற்கு எந்தவிதமான அறிவுப்பூர்வமான ஆதாரமும் கிடையாது. சோதிடம் பொது மக்களிடையே மூடத்தனத்தை வளர்த்துப் பகுத்தறிவைப் பாழாக்குகிறது. இந்த சோதிடத்தின் ஏமாற்றுக்கு எதிர்காலம் நல்ல பாடம் கற்பிக்கப் போகிறது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். விஞ்ஞான அறிவு இல்லாத காலத்தில் ஏற்படுத்தப்பட்ட கற்பனைகளே இவைகள்."*

*இவ்வாறு 186 விஞ்ஞானிகள் கையெழுத்திட்டு 'தி ஹியுமனிஸ்ட்' ஏட்டின் சிறப்பிதழிலே அறிக்கை வெளியிட்டுள்ளனர். இவர்களுள் 18 விஞ்ஞானிகள் 'நோபல்' பரிசு பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.*

## சோதிடத்தைப் பற்றி ஆச்சாரியார்!

ஜோதிடத்தில் தனக்கு நம்பிக்கை இல்லை என்று இராஜகோபாலாச்சாரி (இராஜாஜி) கூறியிருக்கிறார். அவர் மேற்கு வங்க முதல் ஆளுநராக இருந்த போது அஜந்தாவுக்கும் எல்லோராவுக்கும் போகும் வழியில் அவுரங்காபாத்தில் வரவேற்பொன்று அளித்தனர். வரவேற்புரையில் அவரை அளவுக்கு மீறி வரம்பின்றிப் புகழ்ந்து வைத்தனர். இராஜாஜியின் முழுப் பெயரில் உள்ள எழுத்துக்களைக் கூட்டி, அதை வைத்து, 'எண் சோதிடம்' கூறுவதாக அவரை ஒரேயடியாக புகழ்ந்து நல்ல பலன்களாகவே கூறினர்.

இவைகளுக்கு இராஜாஜி பதிலளித்துப் பேசுகையில், "உண்மையைக் கூற வேண்டுமானால், நான் ஜோதிடத்தை நம்புவதில்லை; எனக்கு அதில் நம்பிக்கை இல்லை; அதை நம்பக் கூடாது என்று உங்களையும் நான் எச்சரிக்கிறேன். ஜோதிடத்தில் அப்படியே ஏதாவது இருந்தாலும் அதை நட்சத்திரங்களைக் கொண்டு எதிர் காலத்தை அறிவதாகக் கூறுவது சிறிதுகூட அறிவுடைமையாகாது. மாலையை அணிவித்து வரவேற்புரையும் கூறினீர்கள். இவற்றில் மாலையைத்தான் நான் ஏற்றுக் கொள்வேன். ஏனெனில், அதை நான் என் கழுத்திலிருந்து எடுத்துவிட முடியும்; நீங்கள் கூறிய புகழுரைகள் என்னைக் கவலைக்குள்ளாக்குகின்றன" என்றார்.

**(இராஜாஜியின் இராணுவச் செயலாளராக இருந்த டாக்டர் பீமனேஷ் சாட்டர்ஜி எழுதிய 'இராஜாஜியுடன் ஆயிரம் நாள்கள்' என்ற நூலிலிருந்து)**

# அய்யப்பன் மகர ஜோதி 'மர்மம்' என்ன?

சபரி மலையில் ஆண்டுதோறும் 'மகர ஜோதி' என்ற வெளிச்சம் தோன்றும். இது அய்யப்பன் சக்தியால் ஆண்டுதோறும் தானாக தோன்றும் ஒன்று என்று நம்ப வைக்கப் பட்டது. அய்யப்பன் கோயிலுக்குப் போகிற வர்கள், இந்த 'மகர ஜோதியை'யும் தரிசிப்பது ஒரு சடங்கு.

இது உண்மையல்ல. திருவனந்தபுரம் கோயில் தேவஸ்தானம் தான் மின் வாரிய ஊழியர்களைப் பயன் படுத்தி வெளிச்சத்தை உருவாக்குகிறது. அன்றைய கேரள முதலமைச்சர் ஈ.கே. நயினார், இந்த மோசடியை அம்பலப் படுத்துவதற்குச் சென்ற கேரள மாநில பகுத்தறிவாளர் குழுவிடம் உண்மையை ஒப்புக் கொண்டார். பகுத்தறிவாளர் கழகத் தலைவர் சேனல் இடமருகு இதை அம்பலப்படுத்த 'மகர ஜோதி' தெரியும் பொன்னம்பல மேடு என்ற பகுதிக்கு தனது குழுவினருடன் செல்ல திட்ட மிட்டார். அதற்கு முன் கேரள முதல்வர் ஈ.கே. நயினாரை சந்தித்து ஒப்புதல் பெறச் சென்றபோது, ஈ.கே. நயினாரே இந்த உண்மையை வெளியிட்டார். 5.1.1990 அன்று பி.டி.அய். செய்தி நிறுவனம் இதை வெளியிட்டது. முதல் வரின் கருத்தும் ஒலிப் பதிவு நாடாவில் பதிவு செய்யப் பட்டது. பி.டி.அய். செய்தி நிறுவனம் கேரள முதல்வர் கூறியதாக வெளியிட்ட செய்தி இவ்வாறு கூறியது. "HANDI WORK of the Travancore Devaswam Board" பி.டி.அய். வெளியிட்ட செய்தியின் நகல் அருகே தரப்பட்டுள்ளது.

# இப்படியும் இருந்தன மூடநம்பிக்கைகள்!

**தேவதாசி பிரதா:** ஒரு இளம் பெண்ணின் வாழ்க்கையை கடவுளின் கவுரவத்திற்கு தியாகம் செய்வது என்ற பெயரால் சாகடிப்பது; தேவதாசி முறையில் ஒரு இளம் பெண்ணைத் கடவுளுக்கு மணம் முடிப்பது; அதன் மூலம் பாலியல் தொழிலில் இளம் பெண்ணை உள்ளாக்குவது; கங்கை நதியில் மூழ்கி தனது உயிரை மாய்த்துக் கொள்வது; இவை போன்ற இளம் பெண்களுக்கு இழைக்கும் சமூக பழக்கவழக்கம் எனும் கொடுமைகள் 'தேவதாசி பிரதா' எனும் பெயரில் நடந்தது.

**காஸிகர்வதா:** காசியில் உள்ள விஸ்வேஸ்வ நாத் ஆலயத்தில் ஒரு தீர்த்தக் கிணறு இருந்தது. மோட்சம் அடைய விரும்புபவர்கள் அந்தக் கிணற்றில் வீழ்ந்து மரணம் அடைந்தால் மோட்சமடைந்து விடலாம் என்ற நம்பிக்கை. இது பண்டைய மூடநம்பிக்கை.

**சதி பிரதா :** கணவன் இறந்துவிட்டால் அவனோடு மனைவியும் உடன்கட்டை ஏறி எரிந்து உயிருடன் சாக வேண்டும். இளம் மனைவி மறுத்தால் உறவினர் சேர்ந்து பலாத்காரமாக அவளை எரியும் நெருப்பில் தள்ளி விடுவார்கள். இது பண்டைய மூட நம்பிக்கை.

**இரத யாத்ரா :** மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஜெகநாத்புரியில் திருவிழா நடைபெறும். இரத உற்சவத்தைக் கண்டு தரிசிக்க மக்கள் திரள் திரளாகச் செல்லுவார்கள். சிலர் ஓடிக் கொண்டிருக்கும் இரதத்தினுடைய சக்கரத்தின் அடியில் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொள்வார்கள். அவ்வாறு உயிர் துறந்தவர்கள் மோட்சத்திற்குச் சென்று விடுவார்கள் என்ற நம்பிக்கை. இது அன்றைய மூடநம்பிக்கை.

**கங்கை பிரவாஹ் :** குழந்தை இல்லாதவர்கள் கங்கையில் நீராடினால் குழந்தைப் பிறக்கும். ஏனெனில், குழந்தை தரும் பெண் தேவதை கங்கை. இந்த நம்பிக்கை வளர்க்கப்பட்டது; இதனால் குழந்தை இல்லாதவர்கள் 'மலடு' என்ற பெயர் வந்து விடக் கூடாது என்பதற்காக. குழந்தை பிறந்தால் முதலில் பிறக்கும் குழந்தையை கங்கைக்கு அர்ப்பணித்து விடுவதாக நேர்த்திக் கடன் எடுப்பார்கள். அவ்வாறு குழந்தை பிறந்தால் கங்கை நதியில் குழந்தையை மூழ்கடித்துச் சாகடித்து விடுவார்கள். கங்கையின் நேர்த்திக் கடனைத் தீர்ப்பார்கள்.

**மஹா பிரஸ்தான்:** வயதானவர்கள் தண்ணீரில் விழுந்து அல்லது எரியும் நெருப்பில் பாய்ந்து உயிருடன் சாவது. இவ்வாறு இறந்தால் மோட்சம் செல்லுவார்கள் என்ற நம்பிக்கை வளர்க்கப்பட்டது.

**'நரவதா' :** ஒரு குழந்தையின் நலனுக்காக தாய் தந்தை இல்லாத ஆதரவற்ற ஏழைகளின் குழந்தையைப் பிடித்துக் கொண்டு வந்து, கடவுள் அல்லது தேவதைக்குப் பலியிடுவது.

**கன்யவதா:** இராஜபுதனத்தின் இராஜ புத்திரர்கள் தங்கள் மகள்களை திருமணம் செய்து கொடுக்கும் பொழுது தந்தைகள் தங்களின் உறவினர் முன்பு தலைகுனிந்து வணங்க வேண்டும்.

அவ்வாறு பணிவதை இராஜபுத்திரர்கள் விரும்புவதில்லை. இதனால் பெண் குழந்தை பிறந்த உடனே கொன்று விடுவது பழக்கம். சமூக சீர்திருத்தவாதிகள் நடத்திய இயக்கங்களின் விளைவாக இது போன்ற நடவடிக்கைகள் பல கடுமையான சட்டங்கள் போட்டு தடுத்து நிறுத்தப்பட்டன என்பது வரலாற்றுண்மையாகும்.

**நன்றி : எம்.வி. சுந்தரம் எழுதிய"சாத்திரப் பேய்களும், சாதிக் கதைகளும் (மார்க்சியப் பார்வை)" நூலிலிருந்து**

## குரங்குகளிடமிருந்து பெற்ற மனித கைரேகைகள்

*தோழர் மா. சிங்காரவேலர் எழுதிய “விஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்” மிகச் சிறப்பான அறிவியல் விளக்கங் களைக் கொண்டுள்ள நூல். பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம் 1934ல் இதை முதலில் வெளியிட்டது. அதிலிருந்து ஒரு பகுதி:*

*கையிலுள்ள கோடுகளைப் பார்த்து ஜோஸ்யம் சொல்லுவது உலக முழுமையும் பரவியுள்ள ஓர் வித்தையாகும். அது வெறும் பழக்கமே அல்லாது உண்மையல்ல. நமது கையிலுள்ள கோடுகளைப் போல் நமது ஒரு காலத்து பூர்வபங்காளிகளாகிய வாலில் லாக் குரங்குகளுக்கும் உண்டு. இன்னும் தூரப் பங்காளிகளாகிய (Distnat cousins) வாலுடைய குரங்குகளுக்கும் கையில் கோடுகள் இருக்கின்றன. ஆனால் காட்சிச் சாலைகளில் வசிக்கும் காட்டு மனிதக் குரங்குகளின் கைகளைப் பார்த்து ஜோதிடம் சொல்வார் யாருமில்லை.*

*நமது கைகளில் இருக்கும் கோடுகள் (Grooves) நமது காலத் தில் நமது குரங்கு மூதாதைகள் மரத்தில் தாவிப் பிடித்து தாண்டும் போது உண்டான தோல் மடிப்புகள். அந்த வம்சத்தலிருந்து வந்தவர்களாகிய நமக்கும் அந்த மடிப்புகள் பரம்பரை வழியாக (Hereditory) தோன்றுகின்றன. நமது கைக்கோடுகள் காட்டுக் குரங்குகளின் வம்ச பரம்பரையாக வந்தவை. பல கோடி வருஷங் களாக நமது மூதாதைகள் மரங்களில் வாழ்ந்த காலத்தில் தாவுவதற்கு தங்கள் கைகளை உபயோகித்து வந்து இருக்க வேண்டும்.*

*இன்றைக்கும் வாலுடைய குரங்குகளும், வாலில்லாக் காட்டு மனிதக் குரங்குகளும் அம்மாதிரியாகவே தாவிச் செல்கின்றன. அப்படித் தாவிச் செல்வதால் கைகளை மடிக்க வேண்டி வருகின்றன. கைகள் மடியுண்ட இடங்களில் வரி வரியாகக் கோடுகள் உண்டாயின. அப்படி உண்டான கோடுகள் தான் அந்த சந்ததி மூலமாக நமக்கும் வந்திருக்கின்றன. இது தான் நமது உள்ளங்கையில் உண்டாயிருக்கும் கோடுகளுக்கான காரணம்.*

# அரசியல் வழியாக –
# ‘சோதிட நம்பிக்கையாளர்கள்’
# எழுப்பும் கேள்விகளுக்கு பதில்

**சோ**திட நம்பிக்கையாளர்கள் சோதிடமும் ஒரு அறிவியல் தான் என்று முன் வைக்கும் வாதங்களுக்கு அறிவியல் மறுப்பு.

எம்.ஜே. அக்பர் எழுதிய நேருவின் வாழ்க்கை வரலாற்றில் ஓர் ஆச்சரியமான சம்பவம் குறிப்பிடப்படு கிறது. குல்சாரிலால் நந்தாவின் வற்புறுத்தலின்பேரில் ஜோஷி என்ற சோதிடரைச் சந்தித்தார் நேரு. 1950களின் இறுதியில் இந்தச் சந்திப்பு நடந்திருக்கலாம். நடக்கப் போகின்ற பலவற்றைப் பற்றி நேருவிடம் ஜோஷி சொன்னார். அவர் சொன்னவற்றில் முக்கியமானது நேருவின் மரண நாள். சோதிடர் சொன்ன நாள் 27 மே, 1954.

இந்தச் சம்பவத்திற்கு நேர்மாறாக இன்னொரு சம்பவத்தை நேருவின் அந்தரங்கச் செயலாளராக இருந்த மத்தாய் தனது நினைவுகளில் குறிப்பிடுகிறார். நேரு அவரிடம், ‘‘நான் 74 வயதுக்கு மேல் இருக்க மாட்டேன்’’ என்று சொல்லியிருக்கிறார். சோதிடர்கள் சொல்லி

யிருப்பார்கள் என்ற மத்தாய்க்கு நேரு அளித்த பதில்: ''இல்லை. குடும்பத்தில் இருந்த ஆண்களின் வயதுகளின் சராசரியைக் கணக்கிட்டேன். சரியாக 74 வருடங்கள், 6 மாதங்கள், 13 நாட்கள் வருகின்றன.''

இந்தச் சம்பவங்கள் வாழ்க்கையின் புதிர்களை அவிழ்க்க மனிதன் செய்யும் முயற்சியின் பல பரிமாணங்களில் இரண்டைக் கோடிட்டுக் காட்டுகின்றன. நம்மில் பலருக்கு சோதிடம் துல்லியமாகப் பலித்த அனுபவங்கள் இருக்கலாம். என்னுடைய நெருங்கிய நண்பர் ஒருவர்கூட அவரது மனைவி மரணம் எய்தும் நாளை, மரணம் அடைவதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சோதிடர் துல்லியமாகக் கணித்ததைப் பற்றி மிகுந்த வியப்போடு குறிப்பிட்டார். இதற்கு நேர்மாறாக இன்னொரு சம்பவத்தை என்னால் சொல்ல முடியும். என்னுடைய தாய்வழித் தாத்தா ஒரு சிறந்த சோதிடர் என்று குடும்பத்தில் சொல்லிக் கொள்வார்கள். எனது பெரியம்மாவை நன்றாக ஜாதகம் கணித்துக் கல்யாணம் செய்து வைத்தார். 20 வயதில் பெரியம்மா தன் கணவனை இழந்தார்.

இன்று இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில், சோதிடத்தை நம்பாதவர்களைவிட நம்புகிறவர்கள்தான் மிக அதிகமாக இருப்பார்கள் என்று நினைக்கிறேன். குருப்பெயர்ச்சிப் புத்தகங்கள் இட்லி, வடையைவிட அதிகம் விற்பனையாகின்றன. செவ்வாய் தோஷம் என்று அவர்கள் ஜாதகம் சொல்வதால், பல அழகிய பெண்களும் வசீகரமான ஆண்களும் திருமணம் செய்து கொள்ள முடியாமல் காலம் தள்ளுகிறார்கள். சோதிடர்கள் பரிகாரம் உண்டு என்று உறுதியளித்தாலும் மரணத்துக்குப் பரிகாரம் உண்டு என்பதை மறுதரப்பினர் நம்பத் தயாராக இல்லை.

### ஐந்து கேள்விகள்:

சோதிடத்தை நம்புங்கள் அல்லது நம்பாதீர்கள். அது மனம் சார்ந்தது. ஆனால், சோதிடம் அறிவியலின் ஓர் அங்கமா? பல சோதிடர்கள் ஆம் என்கிறார்கள். அதற்கு அவர்களில் பலர் ஐந்து காரணங்களைத் தருகிறார்கள் என்று புகழ் பெற்ற விஞ்ஞானி நர்லிகர் சொல்கிறார்.

1. வானவியலைப் போலவே சோதிடமும் கோள்களை ஆதாரமாகக் கொண்டது. வானவியல், அறிவியலின் அங்கமாக இருக்கும்போது சோதிடம் ஏன் இருக்கக் கூடாது?

2. சில சோதிடர்களின் கணிப்பு துல்லியமாக இருக்கிறது என்பது உலகறிந்த ஒன்று. எனவே, அவர்களது சோதிடத்தையாவது அறிவியல் என்று ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

3. வானிலை மற்றும் மருத்துவத் துறையை எடுத்துக் கொள்வோம். வானிலை அறிவிப்புகள் பொய்த்துப் போகின்றன. மருத்துவரின் சிகிச்சை பலனளிக்காமல் போகிறது. இவற்றை அறிவியலின் அங்கமாக எடுத்துக் கொள்ளும்போது, சோதிடத்தை ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது?

4. சோதிடத்தைச் சரியாகப் படிக்காதவர்கள் சொல்வதுதான் பொய்த்துப் போகிறது. நன்றாகப் படித்தவர்கள் சொல்வது பொய்க்காது. அவர்கள் சொல்வதையாவது அறிவியல் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். போலிகளை வைத்துக் கொண்டு, இந்தத் துறையையே குறை சொல்ல முடியாது.

5. அறிவியலுக்குக் கொடி பிடிப்பவர்கள் சோதிடத்தைப் படிக்காமலும் சோதனைக்குள்ளாக்காமலும் அகந்தை யோடு அதைப் புறந்தள்ளுகிறார்கள்.

## அறிவியல் என்றால் என்ன?

அறிவியலைப் பொறுத்தவரையில் அதன் எந்த ஒரு முடிவும் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஒருவர் சோதனை செய்துஅடைந்த அதே முடிவை, அதே சோதனையைச் செய்த அனைவரும் அடைய வேண்டும். ‘‘எனக்குத் தான் சரியாக வரும். உங்களுக்கு வராது’’ என்று எந்த விஞ்ஞானியும் சொல்ல முடியாது. ராமர் பிள்ளையின் மூலிகை பெட்ரோல் பிசுபிசுத்துப் போனதன் முக்கியக் காரணம் இதுதான். அறிவியல் சோதனைகளும் கண்டறிதல் களும் புள்ளியியல் முறைப்படி விளக்கக்கூடியதாக வடிவமைக்கப்பட வேண்டும். இவ்வளவு பாதுகாப்புகள் இருந்தும் அறிவியல் நாள்தோறும் நுண்ணிய மாறுதல்களை அடைந்துகொண்டே இருக்கிறது. நியூட்டனின் விதிகள் ஐன்ஸ்டனின் சார்பியல் தத்துவத்தால் மாறுதல்களை அடைந்தன என்பது நாம் அறிந்ததே.

## இனி பதில்களுக்கு வருவோம்

1. அறிவியல் கடும் சோதனைகளுக்குத் தன்னை உட்படத்திக் கொண்டிருக்கிறது. அதனால் மாறுதல்களையும் அடைந்திருக்கிறது. உதாரணமாக, புளூட்டோ என்ற 'முன்னாள்' கோள், இன்று கோளாக அடையாளம் காணப்படுவது இல்லை. சோதிடம் இதே போன்று சோதனைகளுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்ள முடியுமா? அதற்கென்று தனிப்பட்ட விதிகள் ஏதாவது இருக்கின்றனவா? கணிப்புகள் பொய்யானால் தத்துவம் பொய்யானது என்று ஏற்றுக் கொள்ளப்படுமா? இவற்றுக்கெல்லாம் பதில், 'இல்லை' என்றுதான் வரும்.

2. கார்ல் பாப்பர் என்ற அறிஞர் கூறியதுபோல் எந்த அறிவியல் கொள்கையும் ஒரே ஒரு தடவை உண்மை யற்றது என்று நிரூபிக்கப்பட்டால், அந்தக் கொள்கையே உண்மையற்றதாக ஆகிவிடும். உதாரணமாக, நியூட்டனின் விதிகளின்படிதான் திருநெல்வேலி எக்ஸ்பிரஸ், நெல்லையிலிருந்து சென்னை எழும்பூருக்குக் குறித்த நேரத்தில் வந்தடைகிறது. ஒரே ஒரு நாள் அது எழும்பூருக்குப் பதிலாக திருவனந்தபுரம் சென்றால் விதிகள் பொய்த்துவிடும். மாறாக, சோதிடத்தில் பலிப்பதைவிட பொய்ப்பதுதான் அதிகம். ஒவ்வொரு வரும் ஒவ்வொரு மாதிரி சொல்கிறார்கள். யார் சொல் வதை உண்மை என்று எடுத்துக் கொள்வது? சோதிடத் துக்கான பாடப் புத்தகங்களை எப்படித் தயாரிப்பது?

3. வானிலை அறிவிப்புகளிலும் மருத்துவத்திலும் பிழைகள் இல்லாமல் இல்லை. ஆனால், அவை அறிவியல் முறையை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றின் முடிவுகள் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. எனவே, இன்று ஏறத்தாழ அல்லது துல்லியமாக வானிலையைக்கணிக்க முடிகிறது. நோயின் தன்மையை அறிய முடிகிறது. சிகிச்சை முறைகள் சீர்படுத்தப்படுகின்றன. இதுபோன்று சோதிடத்தில் நடக்கிறதா?

4. உங்களில் யாருக்காவது சொன்னவைஅனைத்தும் பொய்க்காத

சோதிடரைத் தெரியுமா? அல்லது சொன்னவை ஏன் பொய்த்தன என்பதை அறிவியல் முறைப்படி விளக்க முடியுமா?

5. சோதிடத்தை ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகளின் நூல்கள் பல உள்ளன. இவற்றில் ஒன்றுகூட சோதிடத்துக்குச் சாதகமான தீர்ப்பைத் தரவில்லை.

உளவியலில் 'பார்னம் விளைவு' என்ற அம்சம் ஒன்று உண்டு. பார்னம் சர்க்கஸின் வெற்றிக்குக் காரணம், அதன் விதவிதமான ஆட்டங்கள் பலதரப்பட்ட மக்களுக்குப் பிடித்திருப்பதுதான். எல்லோருக்கும் எல்லாமும் பிடித்திருக்க வேண்டிய கட்டாயம் கிடையாது. ஆனாலும், ஒன்றிரண்டு ஆட்டங்கள் பிடித்திருப்பதால் சர்க்கஸ் முழுவதும் பிடித்திருக்கிறது. இதே போன்று பல கணிப்புகள் சொல்லப்பட்டாலும், பலித்திருக்கும் கணிப்பை மட்டும் மனம் நினைவில் கொள்கிறது.

நம்பிக்கை சார்ந்த எதையும் மக்களுக்குத் தர்க்கரீதியாகப் புரிய வைப்பது கடினம். சோதிடம், நம்பிக்கையைச் சார்ந்தது.

**'தமிழ் இந்து'வில் பி.ஏ. கிருஷ்ணன் எழுதியது**

## கழிப்பறைகளுக்கு தடை போடும் 'வாஸ்து'

*'வாஸ்து' நம்பிக்கை – மத மூடநம்பிக்கைகளால் கழிப்பறை கட்டுவதற்கு மறுக்கும் மக்கள் இருக்கிறார்கள். கழிப்பறை கட்டாமல் பொதுவிடங்களில் மலம் கழிக்கும் பழக்கம் – இந்த மூடநம்பிக்கைகளால் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. நாமக்கல் மாவட்டம் பரலி பஞ்சாயத்துக்குட் பட்ட பகுதியில் அருணா (42), பெரியசாமி (45) தம்பதியினர் வீட்டுக்கு கழிப்பறைக் கட்டுவதற்கு குழிதோண்டி முடித்த பிறகு, சோதிடர் வீட்டுக்கு அருகே குழி தோண்டினால் 5 வயது மகனுக்கு ஆபத்து வரும் என்று கூறினாராம். உடனே கழிப்பறைக் கட்டுவதை கைவிட்டுவிட்டனர். அனியாபுரம் பஞ்சாயத்தில் ரூ.6000 செலவிட்டு கழிப்பறையைக் கட்டி முடித்த தச்சுத் தொழிலாளி சிவசக்தி (30), 'வாஸ்து' சோதிடர் ஒருவர் பேச்சைக் கேட்டு கட்டிய கழிப்பறையை இடித்துத் தள்ளியுள்ளார். கோயில் விழாக்கள் நடக்கும் காலத்தில் கழிப்பறை கட்டுவது கெட்ட சகுனம் என்று நம்பி, கிராம மக்கள் கழிப்பறை கட்டுவதையே நிறுத்தி வருகிறார்கள்.*

# சோதிடப்படி குற்றவாளிகளை குற்றம் சாட்ட முடியுமா? - பெரியார்

இந்தச் சாதகன் இன்ன வேளையில் இன்னாரைக் கொன்று ஜெயிலுக்குப் போவான் என்று இருந்தால், அந்தக் கொல்லப்பட்டவனுடைய சாதத்திலும் இன்ன வேளையில் இன்னாரால் கொல்லப்பட்டுச் சாவான் என்று இருந்தால் ஒழிய, ஒரு காலமும் பலன் சரியாக இருக்க முடியாது. இந்த இரண்டு சாதகர்களுடைய பலனும் இருவருக்கும் தெரிந்து விட்டதாகவே வைத்துக் கொண்டாலும், இவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டாவது தப்பித்துக் கொள்ள முடியுமா என்றால் ஒரு காலமும் முடியாது. ஏனெனில் தப்பித்துக் கொண்டால் சோதிடம் பொய்யாகிவிடம். ஒரு சமயம் தப்பித்துக் கொள்வதாகவே வைத்துக் கொண்டால் அந்த இருவர்கள் சாதகத்திலும் அந்த முடிவும் இருக்கும். அப்படி இருக்குமானால், இந்த விஷயத்தை அவர்கள் இருவரும் தெரிந்து ஜாக்கிரதையாய் இருந்தாலும், தெரியாமல் கவலையற்று அஜாக்கிரதை யாயிருந்தாலும் இவ்விருவருக்கும் கொலையும் சிறைவாசமும் கிடைக்க முடியவே முடியாது என்பதிலும் சந்தேகமில்லை. ஏனெனில் சாதகத்தில் ஏற்கெனவே இருக்கின்றபடி நடந்துதானே தீரும்!

இதற்கு, சாந்தி, தோஷப் பரிகாரம் என்பவைகள் செய்வதன் மூலமாவது ஏதாவது பலனை மாற்றிவிட முடியுமா என்பதையும் யோசிக்கலாம். அதாவது, இன்ன கிரகம் இன்ன வீட்டில் இருப்பதால் இன்ன கெடுதியான பலன் ஏற்படும்; ஆதலால் இன்ன தோஷப் பரிகார சாந்தியும், இன்ன கிரக தேவதைக்கு இத்தனை நாள்

அர்ச்சனை செய்தால் நிவர்த்தியாகும் என்று சோதிடன் சொல்வானானால் இந்தச் சாந்தியின் மூலமாகவோ அர்ச்சன் மூலமாகவோ அந்தக் கிரகங்களை அந்தக் காலத்தில் அந்த வீட்டைவிட்டு மாற்ற முடியுமா? அல்லது, அவைகள் மாறுமா என்பதைக் கவனிக்க வேண்டும். அது மாத்திரமல்லாமல், இம் மாதிரிச் சாந்தியோ, பரிகாரமோ செய்வதன் மூலம் தப்பித்துக் கொள்வான் என்றும் அதில் இருந்தாக வேண்டாமா? அப்படிக்கில்லாதபட்சம், எந்தவிதச் சாந்தியாலும் தோஷம் பரிகாரமாக முடியாது. முடிந்தால் சோதிடம் பொய்யென்றே ஆகிவிடும்.

முடிவாக, எந்தக் காரணத்தைக் கொண்டாவது சோதிடம் உண்மை என்றாகிவிட்டால், எந்த மனிதன்மீதும் எந்தக் குற்றமும் சொல்லுவதற்கு இடமுண்டா? சாதகப் பலன்படி நடவடிக்கை நடந்தால் அதற்குச் சாதகன்மீது குற்றம் சொல்லுவது மடமையும் யோக்கியதைப் பொறுப்பதற்கு தன்மையும் ஆகாதா? ஒரு மனிதனுக்கு இன்ன காலத்தில் திருடரால் பொருள் இழப்பு ஏற்படும் என்று இருந்தால், அதே நேரத்தில் மற்றொரு மனிதனுக்கு 'திருட்டுத் தொழிலில் பொருள் இலாபம் கிடைக்கும்' என்று சாதகப் பலன் இருந்துதான் ஆக வேண்டும். அதுமாத்திரமல்லாமல், திருட்டுக் கொடுத்தவனுக்குப் பணம் கொடுத்து யார் யார் நஷ்டமடைந்தார்களோ, அவர்கள் சாதகத்திலும் – இன்ன காலத்தில் இன்னாருக்குப் பணம் கொடுத்து அது திருட்டுப் போய் அதனால் நஷ்டமடைய வேண்டும் என்று இருந்தே ஆகவேண்டம். ஆகவே, இந்தப்படியெல்லாம சோதிட உண்மை இருந்துவிட்டால் பிறகு கடவுள் செயல் எங்கே? மோட்ச நரகம் எங்கே? தலைவிதி எங்கே? முன் ஜென்ம வினைப்பயன் எங்கே? இவைகளுக்கு வேலை ஏது? – என்பதைப் பற்றி யோசித்தால் இவை அவ்வளவும் பொய்யாகவே முடியும்.

– 'பகுத்தறிவு' 1935


*வெளியீடு:*

**திராவிடர் விடுதலைக் கழகம்**

95 டாக்டர் நடேசன் சாலை
டாக்டர் அம்பேத்கர் பாலம்
மயிலாப்பூர், சென்னை-600004.

**தொடர்புக்கு:**
**9941759641 / 9941613535/044-24980745**

*மின்னஞ்சல்* : **www.dvkperiyar.com**

# நேரத்தைத் தொலைத்தவன் வாழ்க்கையைத் தொலைக்கிறான்

**நல்ல செயல் செய்யக் கூடாத நாட்கள்**

| | |
|---|---|
| இராகுகாலம் 1 மாதத்திற்கு.. | 1.30 x 30 = 45 |
| ஒரு ஆண்டிற்கு ........................ | 540 மணி |
| எமகண்டம் 1 மாதத்திற்கு.... | 1.30 x 30 = 45 |
| ஒரு ஆண்டிற்கு....................... | 540 மணி |
| அஷ்டமி (மாதத்திற்கு 2 நாள்) | |
| ஒரு ஆண்டிற்கு... | 48 x 12=576மணி |
| நவமி (மாதத்திற்கு 2 நாள்) | |
| ஒரு ஆண்டிற்கு ....................... | 48 x 12=576 மணி |
| மரணயோகம் 1 மாதத்திற்கு.. | 1.30 x 30 = 45 |
| ஒரு ஆண்டிற்கு | 540 மணி |
| (மாதத்தில் 3 நாட்கள்) | கரிநாள் |
| ஒரு ஆண்டிற்கு.... | 864 மணி |
| (பாட்டிமை மாதம் 2 நாட்கள்) | பிரதமை |
| ஒரு ஆண்டிற்கு..... | 48 x 12=576 மணி சூரிய கிரகணம் |
| ஒரு ஆண்டிற்கு ஒரு நாள்.. .. | 24 மணி சந்திர கிரகணம் |
| ஒரு ஆண்டிற்கு ஒரு நாள் | 24 மணி |
| மதம் சார்ந்த பண்டிகை ஆண்டிற்கு 33 நாட்கள் | |
| ஒரு ஆண்டிற்கு...... | 33 x 24 =792 மணி ஆக, |
| மொத்தம்...... | 5052 மணி |
| | (5052 /24 மணி = 210 நாட்கள்) |

ஆக ஆண்டிற்கு 365 நாட்களில் 210 நாட்கள் வீண்.

மத நம்பிக்கை என்ற பேரால் விலை மதிக்க முடியாத நம் நேரம் வீணடிக்கப்படுகிறது. நம் மூளையில் இடப்பட்ட இந்த விலங்கை முதலில் உடையுங்கள்... காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது. நேரத்தைத் தொலைத்தவன், வாழ்க்கையைத் தொலைக்கிறான்.

**முகநூலிலிருந்து**